உ
சிவமயம்

சாக்கோட்டை

அருள்மிகு வீரசேகர-உமையாம்பிகை உய்யவந்தம்மன் கோவில்



குடமுழுக்கு விழா மலர்

ரெளத்திரி ஆண்டு தைத்திங்கள் 27ம் நாள்

9-2-1981

உ

சிவமயம்

சாக்கோட்டை
அருள்மிகு வீரசேகர - உமையாம்பிகை
உய்யவந்தம்மன் கோவில்

குடமுழுக்கு விழா மலர்

ரௌத்திரி ஆண்டு தைத்திங்கள் 27 ஆம் நாள்

9-2-1981

வெளியீடு :

குடமுழுக்கு விழா மலர்க்குழு

புதுவயல்

இராமநாதபுர மாவட்டம்.

63

மலர்க் குழுவினரின்
மனமுவந்த நன்றியுரை

வரலாற்றுப் புகழ் வாய்ந்த சாக்கோட்டை அருள்மிகு உமையாம்பிகை உடனுறைய வீரசேகரர், அருள்மிகு உய்யவந்த அம்பாள் புனிதத் திருக்குட நீராட்டு விழா ரௌத்திரி ஆண்டு தைத்திங்கள் 27 ஆம் நாள் (9-2-81) திங்கட் கிழமை மிகச் சிறப்புற நடைபெற இருப்பதையொட்டி ஒரு மலர் வெளியிட வேண்டும் என மலர்க் குழுவினராகிய நாங்கள் இறையருளால் முடிவு செய்தோம்.

அந்த எண்ணத்திற்கு வண்ணம் கொடுக்கும் வகையில் வணிகப் பெருமக்களும் இறையன்பர்களும், பல நண்பர்களும் மலர் வெளியிடுவதற்கான அடிப்படைப் பொருளை நல்கி பேருதவி செய்திருக்கிறார்கள். அல்லும் பகலும் பாடுபட்டு, தங்களின் சொந்த வேலையிலும் இப் பணியைச் சிறந்ததாகக் கருதி விளம்பரங்களை வாங்கித் தந்த இறையன்பர்களின் தொண்டு எங்கள் உள்ளத்தில் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும்.

பல சான்றோர்கள் வாழ்த்துரை வழங்கி மலரைப் பெருமைப் படுத்தியுள்ளார்கள்.

மலர் மணம் கமழ பல அறிஞர்களும் கவிஞர்களும், மெய்யன்பர்களும் தங்களின் கவிதைகள், கட்டுரைகள், கல்வெட்டுத் தொகுப்புகள் ஆகியவற்றைத் தந்து சிறப்பித்து உள்ளார்கள்.

மலர் அச்சிட நிழற்படங்களை எடுத்துதவிய காரைக்குடி சுந்தரம் போட்டோ ஸ்டுடியோவினரின் சேவையும், பிளாக் செய்து தந்த அன்பர்களின் இறைப்பற்றும், மலரை அழகிய முறையில் உரிய காலத்தில் அச்சிட்டு உதவிய சென்னை லெட்சுமி கம்பெனி அச்சகத்தாரின் கடமை உணர்வும் என்றும் பாராட்டுதலுக்கு உரியனவாகும்.

எங்கள் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துதவிய மேற்கண்ட அனைவருக்கும் மலர்க் குழுவின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அவர்களுக்கு எல்லா நலங்களும் வளங்களும் அருளுமாறு சாக்கைவாழ் தெய்வங்களை சந்ததமும் வணங்குகின்றோம்.

மலர்க் குழுவினர்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பதிப்புரை

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வீரவனமாக இருந்த சாக்கோட்டையில் கோயில் கொண்டுள்ள வீ ர சே க ர-உமையாம்பிகையைத் தொழுது இம்மை மறுமைப் பேறுகள் பெற்ருேர் பலர். இக்கோயிலுக்குப் பல முறைகள் கும்பாபிஷேகங் கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இக்கோயிலின் இராஜகோபுரம் பல மைல்களுக்குத் தொலேவிலிருந்தும் தெரியக்கூடியது.

வீரசேகர-உமையாம்பிகைமீது ஏராளமான புராண இலக்கியங்கள் தோன்றி உள்ளன. நால்வர் பாடல் இக்கோயிலுக்கு இல்லாததால் நால்வர் காலமாகிய கி.பி. 7-ஆம் நூற்ருண்டுக்குப் பின்பே இக்கோயில் எழுந்திருக்கவேண்டும். நகரத்தார்களும் இப் பகுதிக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து கி. பி. 7-ஆம் நூற்ருண்டுக்குப் பிறகே குடிபெயர்ந்து வந்திருக்கவேண்டும்.

இக்கோயில் சிவகங்கை ச ம ஸ் தா ன அருளாட்சிக்கு உட்பட்டது. இதன் திருப்பணியில் பல ஊர் நகரத்தார்கள் ஈடுபட்டுள்ளனர்.

1960-ஆம் ஆண்டில் நடந்த கும்பாபிஷேகத்திற்குப் பிறகு இருபது ஆண்டுகள் கழித்து, 9-2-1981 அன்று கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது. அதனே ஒட்டி இம்மலர் வெளிவருகிறது. இது வெளிவர நிதி நல்கி, ஒத்துழைத்து விளம்பரங்கள் தந்தவர்களுக்கும், நன்கொடை வழங்கியவர்களுக்கும், கட்டுரை-கவிதை-வாழ்த்துச் செய்தி முதலியன அருளிய அறிஞர்களுக்கும், எல்லா வகை உதவிகளும் செய்த மலர்க்குழுவினர்க்கும் எனது பணிவான நன்றி உரியது.

புதுவயலில் பிறந்து, தமிழ் பயின்று, தேவகோட்டைக்கு வளரச்சென்ற என்னேப் புதுவயல் பிள்ளேயாகவே கருதி என்னிடம் இம்மலர்ப்பதிப்புப் பொறுப்பை ஒப்புவித்த மலர்க்குழுவினர்க்கு என் மனமார்ந்த நன்றி உரியது.

அனேவர்க்கும் அம்பிகை அருள் புரிவாளாக,

காரைக்குடி,
5-10-1980.

அன்புசால்,
அரு. சோமசுந்தரன்.

உ

சிவமயம்

குடமுழுக்கு விழா மலர்க்குழு

தலைவர் :

யெ. மு. விசுவநாதன் செட்டியார்

துணைத்தலைவர் :

ப. பெ. அரு. ராம. பழ. அருணாசலம் செட்டியார்

செயலர்கள் :

பெரி. அரு. வீரப்ப செட்டியார்

பெரி. சித. இராமசாமி செட்டியார்

பதிப்பாசிரியர் :

"பொற்கிழிக் கவிஞர்"

அரு. சோமசுந்தரம்

உதவிப் பதிப்பாசிரியர்கள் :

மு. வினைதீர்த்தான் செட்டியார்

புலவர் இராம. வீரப்பன்

உறுப்பினர்கள் :

யெ. மு. சொக்கலிங்கம் செட்டியார்

யெ. மு. பெரியணன் செட்டியார்

வடு. மு. ராம. மு. ராம. மு. இராமநாதன் செட்டியார்

மு. க. இராமசாமி செட்டியார்

மெ. கரு. அண்ணாமலை செட்டியார்

சி. வீர. வீரப்ப செட்டியார்

ப. மு. நா. மு. பழநியப்பன்

சுப. அழகப்பன்

சாத்தப்பா சுப்பிரமணியம்

பெ. ப. வி. அரு. ராம. முத்தப்பன்

அ. சு. பழ. வீர. ராம. நா. வீரப்ப செட்டியார்

அ. சு. பழ. சு. சோம. சுப்பிரமணியன் செட்டியார்

பழ. சிதம்பரம்

ப. வடு. வி. நா. வீர. நாராயணன் செட்டியார்

குழ. உடையப்ப செட்டியார்

சித. வயி. வயிரவன் செட்டியார்.

ஓம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி துணை

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ திருச்சி சுவாமிகள்
கைலாச ஆஸ்ரமம்

கெஞ்சேன ஹள்ளி,
பெங்களூர் - 560 039
2—1—81.

தெய்வத் திருத்தலமாகிய சாக்கைபுரி என்னும் சாக்கோட்டையில் கோயில் கொண்டு அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ உமையாம்பிகை அம்பாள் சமேதஸ்ரீ வீரசேகர மூர்த்தி ஆலயத்தின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 9—2—81உ நிகழ்வது அறிந்து மகிழ்ச்சி.

தெய்வத் திருப்பணியில் நிகரற்று விளங்கும் சிவநெறிச் செல்வர்களான நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் முன்பு இருமுறை ஷை ஆலயம் புதுபிக்கப்பெற்றுக் கும்பாபிஷேகமும் நடத்தி வைக்கப் பெற்றது என்பதையும் இப்பொழுதும் ஷை ஆலயம் நகரத்தார்களின் பெருமுயற்சியின் பேரில் புதுபிக்கப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்பான நிகழ்ச்சி ஆகும்.

அருள்மிகு தெய்வங்கள் உறையும் திருக்கோயில்களைப் புதுப்பித்தல், கும்பாபிஷேகம் செய்வித்தல், பூஜா கைங்கரியங்களை முறைப்படி நடத்துதல் போன்ற இறையருட்பணிகளில் நமது பேரன்புக்குரிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தொன்றுதொட்டு இன்று வரை சிறந்து விளங்குகின்றார்கள்.

அதுபோல, அவர்கள் வழித்தோன்றல்களும் தங்கள் முன்னோர்கள் வழிப்படி நடந்து, நகரத்தார் புகழை நாளும் வளர்க்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

கும்பாபிஷேக மலரும் மிகச்சிறப்பாக அமைந்து அருள்மணம் பரப்ப அருள்பாலிக்குமாறு ஸ்ரீ அம்பாள் திருவடிகளைச் சிந்தித்து இத்துடன் அட்சதை பிரசாதமும் அனுப்பி உள்ளோம்.

இராமநாத ஞானதேசிகர்
கோவிலூர் ஆதீனம்

கோவிலூர்
19-1-1981

தென்பாண்டித் திருநாட்டில், இறைவன் தானே குருபரனாக எழுந்தருளியிருந்து மாணிக்கவாசகப் பெருமானுக்கு மௌன உபதேசம் செய்தருளிய 'திருப்பெருந்துறை' என்னும் திருத்தலத்துக்கு மேல்திசையில், புகழ்மிக்க வீரமரபின் விளைநிலமாகவும், 'வீரவனம்', 'வில்வாரண்யம்', 'வீரர் ஆரண்யம்', 'வீரை', 'அளகை', 'சாக்களூர்', 'சாக்கை' முதலான பல திருப்பெயர்களுடனும் திகழ்வது 'சாக்கோட்டை' என்னும் சாக்கைக்கோட்டைத் திருத்தலம்.

இத்திவ்ய தலம், மூர்த்திச் சிறப்பும், தல மஹாத்துவமும், தீர்த்த விசேடமும் முறையாகப் பொருந்தி, குபேரன் முதலான தேவர்களாலும், சோழ அரசர்களாலும், பாண்டிய மன்னர்களாலும் வழிபாடு செய்யப்பெற்ற தொன்மைப் புகழ் வாய்ந்தது.

புராண காப்பியச் சிறப்பும், வரலாற்றுப் புகழும் கொண்ட இத்தலத்தில் உறையும் அருள்மிகு உமையாம்பிகை உடனுய அருள்தரு வீரசேகரப் பெருமான் திருக்கோயிலில் புதிய கருங்கல் மண்டபம் அமைத்தும் பல சீரமைப்புப் பணிகள் செய்தும் கண்கவர் வண்ணங்கள் தீட்டியும் புதுப்பித்து நாளிது ரௌத்திரி ஆண்டு தைத் திங்கள் 27ம் நாள் (9-2-1981) திங்கட்கிழமையன்று திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் தனிச் சிறப்பியல்பாகிய 'தேடிச் சென்று திருப்பணிக் கைங்கர்யம் செய்யும்' பண்பிற்கேற்ப புதுவயல் நகரத்தார்கள் இக் கைங்கர்யத்தில் பெரும் பொறுப்பு ஏற்று மிகச் சிறப்பாகச் செய்துள்ளது பாராட்டுதற் குரியது.

நமது கோவிலூர் ஆதினத்துக்கும் அருள்மிகு உமையாம்பிகை உடனுய அருள்தரு வீரசேகரப் பெருமான் திருவருட் செயல்களுக்கும் இருந்து வரும் நீண்ட நாளையத் தொடர்பை எண்ணி எண்ணி இன்புறுகின்றோம்.

வீரசேகரப் பெருமானின் வியத்தகு மாண்பினை உணர்த்தும் 'வீரவனப் புராண'த்தினைத் தமிழில் மொழி மாற்றம் செய்யுமாறு, 'கவிஞர் கோமான்', திருவாவடுதுறை ஆதீன 'மஹா வித்துவான்', திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைப் பணித்து, ஊக்குவித்து, துணைநின்ற சிறப்பு, கோவிலூர் ஆதீனம் மூன்றுவது குரு மூர்த்தியாகிய ஸத்குரு 'கருணாநிதி' என்று சிறப்பிக்கப் பெறும் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர ஞான தேசிக ஸ்வாமிகளைச் சாரும் என்பதை இங்கு நினைவுகூர்வதில் பெருமகிழ்ச்சி கொள் கின்றோம்.

ஸ்ரீ உமையாம்பிகை சமேத ஸ்ரீ வீரசேகரப் பெருமான் திருவருளால் புதுவயல் நகரில் அவதரித்து, இளம்வயதிலேயே முற்றும் துறந்த முனிவராய்கோவிலூர் ஆதீனத்தில் ஐந்தாவது குருமூர்த்தியாக அமர்ந்து, செயற்கரிய பல அருஞ்செயல்கள் ஆற்றிய, "திருக்களர் ஆண்டவர்'' என்று சிறப்பாகப் போற்றப்பெறும் ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞான தேசிக ஸ்வாமிகளை இந்நன்னாளில் நினைவுகூர்ந்து, மூலகாரண மூர்த்தியான அருள்தரு வீரவனப்'பெருமான் திருவடிகளில் மனம், மெய், மொழிகளால் வணக்கம் செலுத்துகிறோம்.

இச்சிறப்புமிக்க திருப்பணிக் கைங்கர்யத்தில் பேருக்கமுடன் பங்கு கொண்டு சிறப்புறச் செய்த புதுவயல் நகரத்தார்களுக்கும், சிறப்பாக ஸ்ரீ பெரி. சித. இராமசாமி செட்டியாருக்கும் மற்றும் உடனிருந்து உதவி புரிந்த அனைத்துப் பெருமக்களுக்கும், திருப்பணிக் குழுவினருக்கும், மலர்க்குழுவினருக்கும் அருள்மிகு உமையாம்பிகை உடனுய அருள்தரு வீரசேகரப் பெருமான் திருவருளால் எல்லா நலன்களும் நிறைந்து இன்பம் பெருக்கி வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

இராமநாத தேசிகர்

ராணி திருமதி டி. இந்திரா தேவி, பி.ஏ.,
தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு இராமநாதசுவாமி தேவஸ்தானம்,
இராமேஸ்வரம்

இராமநாதபுரம்,
தேதி 5—10—80

வாழ்த்துரை

சாக்கோட்டை அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை உய்யவந்தாள் கோயில் கும்பாபிஷேக விழா நடைபெறவிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன், புதிய ஆலயங்கள் கட்டுவதைவிட, புராதனப் பெருமையும் இலக்கியச்சிறப்பும் வரலாற்றுப் புகழும் கொண்ட தொன்மையான ஆலயங்களை ஜீரணோத்தாரணம் செய்து அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் செய்தல் சாலச் சிறப்புடையதாகும். இவ்வகையில் சிவம் பெருக்கும் சீலர்களாய் விளங்கும் நகரத்தார் பெருமக்களின் சிவப்பணியை நாடறியும், வரலாற்று ஏடறியும். தெய்வப்பணி செய்யும் திருப்பணிக் குழுவினரைப் பாராட்டுகிறேன்.

கும்பாபிஷேக மலர் வெளியிடுவதையும் உளமார வரவேற்கிறேன். பொற்கிழிக்கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட மலர்க்குழுவினரையும் மனமுவந்து பாராட்டுகிறேன்.

கும்பாபிஷேக விழாச் சிறப்பாக நடைபெறவும், விழா மலர் தெய்வமணங் கமழும் ஒண்தீந்தமிழ்க் கட்டுரைகளைத் தாங்கி அன்பர் உள்ளங்களை மகிழ்விக்கவும் எங்கள் குல தெய்வமாய் அருள்தரும் இராஜேஸ்வரி அம்பாளின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன். ‘மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.’’

இங்ஙனம்,
டி. இந்திரா தேவி,
தலைவர், அறங்காவலர் குழு.

தமிழிசைக் காவலர்,
டாக்டர் ராஜா சர் முத்தய்யா செட்டியார்.

செட்டிநாடு இல்லம்,
அடையாறு,
இராஜா அண்ணுமலைபுரம்,
சென்னை-28.
19-9-80

அன்புள்ள ஐயா,

சாக்கோட்டையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை உய்யவந்தம்பாள் கோயிலின் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 9-2-81ல் மிகச் சிறப்பாக நடைபெறவிருப்பதும், அவ்விழாவினையொட்டி மலர் வெளியிட ஏற்பாடு செய்திருப்பதும் பாராட்டுதலுக்குரியதாகும். மிகவும் வரலாற்றுப் புகழ்கொண்ட இக்கோயிலின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மேலும் கும்பாபிஷேக மலர் சிறந்த இலக்கியச் சிறப்பும் புராதனப் பெருமையும், புகழும் கொண்டு எல்லோராலும் வரவேற்கத்தக்க அளவில் அமையும் என்பதில் ஐயமில்லை.

தங்கள் அன்புள்ள
மு. அ. முத்தய்யா செட்டியார்

உ

கிருபானந்தவாரி | முருகா | திருச்சி

வெண்பா — 9—9—80

செய்யசாக் கோட்டை திகழ்வீர சேகர
உய்யவந் தம்பாள்சீர் ஓதினோர்—வையகத்தில்
எல்லா நலன்களும் எய்தியே இன்பமுடன்
பல்லாண்டு வாழ்வர் பணைத்து.

கிருபானந்தவாரி

உ
சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்.

திருப்பனந்தாள்-612504
(தஞ்சை ஜில்லா)
9-9-1980

கல்விவலார் கூடி கவி யாத்துப்புகழ் போற்றிய திருக்கோயிலின் திருக்குடமுழுக்கு விழா, சிறப்புற நிகழவிருப்பதும், விழா தொடர்பாகம லர் வெளியிடவிருப்பதும் அறிந்து மகிழ்கின்றோம்.

ஆடியும் பாடியும் ஆனந்தமாக இறைவனடி தேடியும் நற்செய்கை புரிகின்ற நல்லடியார்கள் இறைவனுக்கு நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடும், குடமுழுக்கு விழாவும் எடுத்துத் தங்கள் உளங்கனிந்த போதெல்லாம் உவந்துவந்து நற்பணிகள் புரிந்து வருதல் தலையாய திருத்தொண்டாகும்.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை என உணர்ந்து அன்பர்கள் எடுக்கும் குடமுழுக்கு விழா இனிதுற நிகழவும், விழாமலர் ஆன்மிக, இலக்கிய மணங்கமழும் பொன் மலரெனப் பொலி யவும்செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
மதுரை ஆதீனம்

70, தெற்கு ஆவணி மூல வீதி,
மதுரை-1,
20-9-80.

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

வரலாற்றுப் புகழும் இலக்கியச் சிறப்பும் மிக்க அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை உய்யவந்தம்பாள் திருக்கோயிலின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் தை மாதம் 27-ந் தேதி (9—2—1981) அன்று வெகு சிறப்புடன் நடைபெற இருப்பதை அறிந்தோம்.

இன்று தமிழகத்தில் தான தர்மங்கள் செய்வதில் காரைக்குடி சிவநேசச் செல்வர்களே முதன்மை இடம் பெற்றிருக்கிருர்கள் என்று சொன்னல் அது மிகையாகாது. அவர்கள் அருட்கொடையும் பொருட்கொடையும் தந்து இந்து தர்மத்தை நிலைநாட்டி வருகின்ற உண்மைத் தொண்டர்கள். "செல்வத்துப் பயன் ஈதல்" என்னும் பொய்யாமொழிக்கு இலக்கணமாக அளவற்ற தொகையைத் திருப்பணிகளுக்கும் தர்ம காரியங்களுக்கும் அளித்து வருகின்றவர்கள். புதிதாகக் கோயில் கட்டித் திருப்பணிகள் செய்தலினும், பழம்பெருங் கோயில்களின் புராதனப் பெருமையையும், மங்காத புனிதத் தன்மையையும் வெளிக் கொணர்தலே சிறப்பு எனக் கருதி, தாங்கள் அனைவரும் ஒருங்கு கூடி முயன்றதன் பயனாக விளைந்தவற்றுள் சாக்கோட்டை அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை உய்ய வந்தம்பாள் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவும் ஒன்று. அடியவர்களும் அறிஞர்களும் அறவோர்களும் சிந்தை மகிழ விழாவினைப் போற்றுவர்.

சீராக அப்பெருவிழா யாதொரு விக்கினமுமின்றி நடைபெறவும், அதில் கலந்துகொள்ளும் அன்பர்கள் அனைவரும் தூய்மை நிறைந்த தம் வாழ்வை இனிய முறையில் நடத்திச் சென்று ஏற்றம் பெறவும் எல்லாம் வல்ல எம்பெருமான் அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்ருேம்.

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்


ஸ்ரீ விரசேகரமூர்த்தி
சந்தனக்காப்பும், நாக ஆபரணமும்;:சாத்திய கோலம்




ஸ்ரீ உமையாம்பிகை
சந்தனக்காப்பும், சொர்ண அங்கியும் சாத்திய கோலம்



[illegible]



சாக்கோட்டை ஸ்ரீ வீரசேகர உமையாம்பிகை கோயில். இராஜகோபுரமும், முன் மண்டபமும், அழகுவிநாயகர் கோயிலும்



வீரவனம் எனும் சாக்கோட்டைத் தல வரலாறு

(பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரன், எம். ஏ., பி. டி.)

சாக்கோட்டை : வீரவனம் எனும் சாக்கோட்டை, இராமநாதபுர மாவட்டத்தில், காரைக்குடியில் இருந்து கிழக்கே சுமார் 8 மைல் தொலைவில் உள்ள புதுவயலுக்கு அருகில் இருக்கிறது. இது கல்வெட்டுகளில் சாய்க்களூர் என்று பெயர் பெற்றிருக்கிறது. இதன் அருகில் சாக்கைவயல் என்ற கிராமம் இருக்கிறது. முதலில் வயலாக இருந்து, பிறகு ஊராகி, அதன் பின் கோட்டையாக உருவாகி இருப்பது இயல்பே. சாக்கைவயல்-சாய்க்களூர்-சாக்கோட்டை என்பது பொருத்தமான வளர்ச்சியே ஆகும். இன்றும் சாக்கோட்டைக் கோயிலுக்கு அருகில் பழங்காலக் கோட்டையின் இடிபாடுகள் காட்சி தருகின்றன.

வீரவனம் : சாக்கோட்டைச்கு வீரவனம், வில்வாரணியம், வீரையூர், அளகை என்ற பல பெயர்கள் உண்டு.

அழகு விநாயகர் : இங்குள்ள விநாயகருக்கு அழகு விநாயகர், சுந்தரவிநாயகர் என்ற பெயர்களும்,

ஸ்ரீ வீரசேகரர் : சுவாமிக்கு வீரசேகரநாதர், திருமுடித்தழும்பர் என்ற பெயர்களும்,

உமையவள் : அம்பிகைக்கு உமையாம்பிகை, உமையாண்டாள் என்ற பெயர்களும் வழங்குகின்றன.

சோழா குளம் : இங்குள்ள பெரிய குளத்திற்குச்சோழாகுளம், சத்தியதீர்த்தம், சிவகங்கை என்ற பெயர்கள் உண்டு.

வீரை மரம் : இங்குள்ள தல விருட்சம் வீரை ஆகும். இது பண்டைக் காலத்தில் சுகுண பாண்டியனின் சந்தேகத்தைத் தீர்க்கும்பொருட்டு வீரசேகரப் பெருமான் அருளால் பலா மரமாகிப் பழுத்துப் பாண்டியனை நம்ப வைத்துப் பிறகு வீரை மரமாகப் பழைய உருவம் பெற்றது.

வழிபட்டுப் பேறு பெற்றோர் : வீரன் எனும் வேடன், அவனது மனைவி சுமதி, கண்டன் எனும் சோழன், அவன் மனைவி சுசீலை, அவர்களது மகன் வீரசேகர சோழன், சுகுண பாண்டியன், குபேரன், அந்தணன் ஒருவன், இடையன் ஒருவன், திருமால், இராமன், ஆவுடையார் கோவில் அந்தணர்கள் முந்நூறு பேர் ஆகிய பலர் பழங்காலத்தில் இத்தலத்தை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

கோயில் தோன்றிய வரலாறு : வட இந்தியாவில் உள்ள நைமிசாரணியம் எனும் பெரிய காட்டில் வாழ்ந்த முனிவர்களுக்குச் சூத முனிவர் சிவத்தலங்களின் பெருமையை உரைத்த பொழுது, வீரவனம் எனும் சாக்கோட்டைத் தலத்தின் பெருமையை விளக்கினர். "வீரவனம் பூலோக சிவலோகம் ஆகும். அதன் பெருமை காந்த புராணத்தில் சனத்குமார சங்கிதையில் கூறப்பட்டுள்ளது. அதனை நான் உரைக்கக் கேட்பீர்களாக" என்று சூத முனிவர் வீரவனத்தின் தல வரலாற்றை விளம்பினர்.

வீரை வனத்தில் பன்னெடுங்காலத்திற்கு முன்பு ஏராளமான மரவகைகள் செறிந்திருந்தன. எனினும் வீரை மரங்கள் மிகுதியாக இருந்தன. மேலும், ஒரு வீரை மரத்தின் அடியில் சுயம்பு லிங்கம் தோன்றி இருந்தது. ஆனல், அந்த லிங்கத்தைப் புற்று மூடி இருந்தது.

அவ்வனத்தில் வாழ்ந்த வீரன் எனும் வேடர் தலைவன் ஒருநாள் கிழங்கு தோண்டப் புறப்பட்டான். அவன் பின் வேட்டை நாயும் சென்றது. லிங்கம் இருந்த வீரைமரப் புற்றின் அருகில் வள்ளிக்கொடி ஒன்று படர்ந்திருந்தது. வள்ளிக் கிழங்கை வேரோடு தோண்டி எடுக்க விரும்பிய வீரன் கடப்பாரையால் புற்றை இடித்தான். அப்பொழுது கடப்பாரையின் முனை, புற்றில் மறைந்திருந்த சிவலிங்கத்தின்மீது பட்டு இரத்தம் பீறிட்டது. இக்காட்சியினைக் கண்ட வீரன் மயங்கி வீழ்ந்தான். உடனே, வேட்டை நாய் வீட்டுக்கு ஓடி, வேடனின் மனைவி சுமதியை அழைத்து வந்தது.

சுமதி ஓடிவந்து, வீரன்மீது விழுந்து புரண்டு அழுதாள். சிவலிங்கத்திலிருந்து இரத்தம் தொடர்ந்து வழிந்துகொண்டிருந்தது. செய்வதறியாது திகைத்த அவள், "சிவபெருமானே ! குற்றம் பொறுத்துக் காக்காவிட்டால் நான்

உயிர் துறப்பேன் '' என்றாள். உடனே சிவலிங் கத்தில் இருந்து வரும் இரத்தம் நின்றது. வீரன் மயக்கம் நீங்கி எழுந்தான். சிவலிங்கத்தை வழி பட்டான்.

சிவபெருமான் அவர்கள் முன் அந்தணர் வடிவில் தோன்றினர். "உங்களுக்கு அருள்புரிய எழுந்தருளினேம். திருமுடியில் தழும்பேற்றமை யின் 'திருமுடித் தழும்பர்' என்றும், வீரை மரத்தடியில் தோன்றியமையின் 'வீரசேகரர்' என்றும் திருநாமம் பெறுவேன். திருமுடித் தழும்பை உண்டாக்கியமைக்காக வருந்தற்க. பிரம்படித் தழும்பு, வில்லடித் தழும்பு, கல்லடித் தழும்பு, செருப்படித் தழும்பு முதலிய தழும்புகள் பல பெற்றுள்ள நமக்கு முடித்தழும்பு பெரிதில்லே. இவையெல்லாம் நமது திருவிளையாடல்கள் ஆகும். வடகிழ்ப்பாகத்தில் உமையவள் எழுந்தருளி உள்ளாள். எங்களே வழிபட்டுப் பேறு பெறுக!" என்று சிவபெருமான் கூறி மறைந்தார். அன்று முதல் வீரனும் சுமதியும் சிவலிங்கத்தையும், உமையவளேயும் வழிபட்டு வந்தனர். எனினும், கோயில் கட்ட வழியில்லேயே என்று வருந்திக் கொண்டிருந்தனர்.

கண்டன் எனும் சோழ மன்னன் பூம்புகாரில் இருந்து அரசாண்டவன். தனக்கு ஏற்பட்ட வெண்குட்ட நோய் திரும்பொருட்டு வடநாட்டுச் சிவத்தலங்களே வழிபட்டும் நோய் தீராமையின், தென்னுட்டுத் தலங்களேயும், இராமேசுவரத்தை யும் வழிபடும்பொருட்டுத் தெற்கு நோக்கி வந்தவன், வீரவனத்துக்கு மேற்குத் திசையில் சோலே சூழ்ந்த பகுதியில் தங்கி இருந்தான். அவன் தங்கிய ஊர், பிறகு கண்டனூர் என்று அவனது பெயரைப் பெற்றது.

வீரனுக்கு வீரசேகரப்பெருமான் கனவில் அறிவித்தபடி, வெண்குட்டத்தால் வாடிய கண்டன் முன் வீரன் ஓடிவந்து வணங்கி, வீரசேகரப் பெருமானின் திருவிளையாடலே வர்ணித்தான். அதனேக் கேட்ட மாத்திரத்தில் கண்டனின் காதில் இருந்த குட்டம் நீங்கியது. அனேவரும் அதிசயித் தனர். வீரசேகரரைக் காணக் கண்டன் எழுந்து முதலடி வைத்தான். உடனே காலில் இருந்த குட்டம் நீங்கியது. வீரசேகரரை நினேத்துக் கை குவித்தான்; உடனே கைகளில் இருந்த குட்டம் நீங்கியது. வீரன் வழி காட்டக் கண்டன் ஓடிவந்து வீரசேகரப் பெருமானேத் தழுவினுன். உடனே அவனது உடலில் இருந்த குட்டம் நீங்கியது. இளமைப் பொலிவோடு மன்னன் திகழ்ந்தான். அவனது மகிழ்ச்சிக்கு எல்லேயில்லே.

கண்டனின் ஆணையால் உடனே வீரசேகரப் பெருமானுக்குக் கோயில் கட்டப்பட்டது

கோயிலுக்கு முன் குளம் இல்லேயே என்று மன்னன் வருந்தினுன். அப்போது ஓர் அசரீரி கேட்டது .... "நான்கு எல்லேகளிலும் மண மலர்களேத் தூவிச் சிவகங்கை எனும் தீர்த்தம் உருவாக்கி உள்ளோம். அவ்வெல்லேக்குள் குளம் வெட்டி நின் பெயர் இடுக" என்று அசரீரி கூறியது. அவ்வாறே மணமலர்கள் காணப்பட்ட நான்கு எல்லேக்குள் மாபெரும் குளம் வெட்டப் பட்டது. அதில் நன்னீர் ஊறியது. அக்குளம் "சோழா குளம்" எனப்பட்டது.

கோயிலேச் சுற்றி வீதிகளும் மாட மாளிகை களும், அறச்சாலேகளும் உருவாக்கப்பட்டன. நன்னுளில் கோயிலுக்குக் குடமுழுக்கும் செய்யப் பட்டது. கோயிலில் நாள்தோறும் சிறப்பாக வழிபாடுகள் நிகழ எல்லா அமைப்புகளும் சோழ மன்னனல் உருவாக்கப்பட்டன.

கண்டனூரில் தங்கியிருந்து சோழன் நாள் தோறும் வீரசேகரரை வழிபட்டு வந்தான். அவன் மனேவி சுசீலேயும் அவ்வாறே வழிபட்டு வந்தாள். அவளுக்கு மணிவயிறு வாய்த்து ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு வீரசேகரச் சோழன் என்று பெயரிட்டனர்.

மந்திரிகள் மன்னனே, "பூம்புகாரை மறந் திருக்கலாமோ? இறைவன் அருள்பெற்றுத் திரும்ப முயலுங்கள்" என்று கூற, மன்னனும் இறையை வணங்கிப் பிரிதற்கஞ்சி வருந்தினுன். அப்பொழுது ஓர் அசரீரி கேட்டது .... "மன்ன! பூம்புகார் செல். ஆண்டுக்கு ஒருமுறை நம்மை இங்கு வந்து வழிபடு" என்றது. அவ்வாறே சோழன் தன் மனேவியுடனும் மகனுடனும் இராமேசுவரம் சென்று, இராமநாதரை வழிபட்டுப் பூம்புகார் திரும்பினுன். ஆண்டுக்கொரு முறை சாக் கோட்டைக்கு வந்து வணங்கும் பழக்கம் கொண்டிருந்தான்.

பாண்டியன் பணி: சோழன் மூலம் வீர சேகரரின் பெருமையை அறிந்த பாண்டிய மன்ன னுகிய சுகுணன் என்பவன், ஒரு நாள் சாக்கோட் டைக்கு வந்து வீரசேகரரை வணங்கினுன். 'வீர சேகரரைப்பற்றிச்சோழன் சொல்லியது மெய்யோ பொய்யோ! இப்பொழுது வியத்தகு நிகழ்ச்சி ஒன்று கண்டால் நம்பலாம் என நினேந்து' பிறகு பிரகாரம் வந்தான். அப்பொழுது அங்கிருந்த

வீரை மரத்தைப் பார்த்தான். "இந்த வீரை மரத்தைப் பலா மரம் ஆகும்படி வீரசேகரர் செய்தால் சிறப்பாக இருக்கும்" என்று பாண்டியன் தன் மனத்துள் நினைத்தான். அவன் இரண்டாம் முறை பிரகாரம் வரும்பொழுது வீரை மரம் பலா மரமாக மாறி நின்றது. பலாப் பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. பழங்கள் வெடித்துச் சுளைகள் சிதறிக் கிடந்தன. எங்கும் பழச்சாறு ஒழுகியது. இந்த அதிசயத்தைக் கண்டு மக்கள் திகைத்தனர். மன்னன் பயந்தான். வீரசேகரரை வணங்கி, "ஈசா! தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்து அருள் புரிக" என்று வேண்டினான்.

உடனே அசரீரி கேட்டது………… "மன்னா, வருந்த வேண்டாம். நம் பெருமையை நீ ஆராய்ச்சி செய்ததில் தவறில்லை. உலகம் நம் பெருமையை அறிய இது ஒரு வாய்ப்பே ஆகும். பலாச்சுளை தின்று நோய் தீர்க. பலா மரம் மீண்டும் வீரை மரம் ஆகும்" என்றது. மன்னன் பலாச்சுளை தின்று நீங்காதிருந்த வயிற்றுவலி நோய் தீர்ந்தான், மக்கள் அனைவரும் பலாச்சுளை தின்று உய்வு பெற்றனர். பலாமரம் மீண்டும் வீரை மரம் ஆயிற்று.

சுகுண பாண்டியன் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்து பேறு பெற்றான்.

குபேரன் வழிபாடு : குபேரன் தன் தந்தையாகிய விச்சிரவா என்பவனின் அறிவுரைப்படி சிவனை நோக்கித் தவம் புரிந்தான். சிவன் தோன்றி, "உனக்கு என்ன வேண்டும்" என்று வினவினான். "பெருஞ்செல்வமும், புஷ்பக விமானமும், நர வாகனமும் வடதிசை ஆட்சியும் வேண்டும்" என்றான். அதற்குச் சிவன், "நல்லது. பாண்டி நாட்டில் குருந்த வனத்திற்கு (ஆவுடையார் கோவில்) மேற்கே, மருத வனத்திற்கு (கண்டதேவி) வடக்கே, சமிவனத்திற்கு (கோயிலூர்) கிழக்கே, வெள்ளாற்றுக்குத் தெற்கே வீரவனம் இருக்கிறது. அங்கே நாம் வீரசேகரராக எழுந்தருளி உள்ளோம். அங்கு வந்து தவம் புரிக. எண்ணியன எய்தும்" என்று சிவபெருமான் கூறினர். அவ்வாறே சாக்கோட்டையில் குபேரன் தவம் புரிந்து எல்லாப் பேறுகளும் பெற்றான். குபேரனின் ஊராகிய "அளகை" எனும் பெயரைச் சாக்கோட்டையும் சிவனருளால் பெற்றது.

சத்திய புட்கரணி : பாண்டி நாட்டில் மங்கலம் எனும் ஊரில் வேளாளன் ஒருவன் இருந்தான். அவன் மகப்பேறு வேண்டித் தன் மனைவியுடன் காசிக்குப் புறப்படுமுன் தனது சொத்துகளை விற்றான். தனது பசுக்களில் பத்தை அந்தணன் ஒருவனுக்குத் தானமாக வழங்கினான். மீதிப் பசுக்களை இடையன் ஒருவனிடம் விற்றான். பிறகு காசிக்குப் போனான். அந்தணன் பெற்ற பசுக்கள் இடையனின் பசுக்களோடு போய்ச்சேர்ந்துவிட்டன. அந்தணன் வேண்டியும் இடையன் அவற்றைத் திருப்பி அனுப்ப மறுத்தான். வழக்கு பாண்டிய மன்னனிடம் சென்றது. உண்மை அறியாமல் பாண்டியன் திகைத்தான். "பசுக்கள் தமதே" என்று இருவரும் வாதாடினர்.

பாண்டியன் இருவரையும் வீரசேகரப் பெருமான் முன் அழைத்து வந்தான். "உண்மை கூறிச் சோழா குளத்தில் மூழ்குக" என்று இருவருக்கும் பாண்டியன் ஆணையிட்டான்.

"எனது பசுக்கள் பத்தும் இடையனின் பசுக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டன" என்று கூறி அந்தணன் சோழா குளத்தில் மூழ்கி எழுந்தான். முன்னிலும் பொலிவுடன் திகழ்ந்தான்.

"பசுக்கள் அனைத்தும் என்னுடையனவே" என்று கூறி இடையன் சோழாகுளத்தில் மூழ்கினான். எழுந்த பொழுது அவனது கண்கள் இரண்டும் குருடாகி இருந்தன. தன் தவற்றைக் கூறி இடையன் கதறினான். காக்குமாறு வீரசேகரரை வேண்டினான். எல்லோரும் அவனுக்காக இரங்கினர். "மீண்டும் குளத்தில் மூழ்குக" என்று அசரீரி கேட்டது. அச்சத்துடன் இடையன் மீண்டும் சோழா குளத்தில் மூழ்கினான். எழுந்த போது கண்கள் தெரிந்தன. அன்று முதல் சோழாகுளம் "சத்திய புட்கரணி" என்று பெயர் பெற்றது.

இடையன் பத்துப் பசுக்களை அந்தணனிடம் கொடுத்தான். மீதிப் பசுக்களைக் கோயிலுக்கு வழங்கினான். கோயிலுக்குத் தொண்டு செய்து வீடுபேறு உற்றான்.

திருமால் பூசனை : "பத்துப் பிறப்புகளைத் தாங்கிப் பூவுலகில் உழல்க!' என்று திருமாலைப் பிருகு முனிவர் சபித்தார். அதனால் சிவ வழிபாடு செய்து தவம்புரியத் திருமால் வீரவனம் வந்தார். வீரசேகரரை வணங்கித் தவமிருந்து வழிபட்டார். அப்பொழுது வீரசேகரர் அவர் முன் தோன்றி, "நீ எடுக்கும் பத்துப் பிறவிகளும் உலகிற்கு உதவியாக இருக்கும். நீ

வீரத்தை வேண்டி வழிபட்டமையின் வீர வசந்தத் திருமால் எனும் பெயர் பெறுவாய்'' என்றார்.

திருமால் இராமாவதாரத்தில் அகத்தியனை வணங்கினார். அகத்தியனின் அறிவுரைப்படி இராமன் வீரசேகரரை வழிபட்டான். அன்று முதல் அவனுக்கு வீரராகவன் என்ற பெயர் ஏற்பட்டது.

கட்டுச்சோறு : வீரசேகரப்பெருமான் அந்தணன் உருவில் ஆவுடையார் கோயில் எனப்படும் குருந்தவனத்திற்குச் சென்றார். அங்கிருந்த மறையவர்கள் அவரை வரவேற்று, "நீங்கள் யார்? எந்த ஊர்?'' என்று வினவினர். அதற்கு அவர், "நாம் எங்கும் இருப்போம். வீரவனத்தில் விருப்புடையோம். நம் பெயர் ஆன்மநாதன். மறைகள் யாவும் தெரியும். இங்கு மறைகள் கற்பிக்க வந்தோம்'' என்றார். மறையவர்கள் தம் பிள்ளைகளுக்கு மறைகள் கற்பிக்கும் வாய்ப்பை ஆன்மநாதருக்கு வழங்கினர். அவ்வாறே ஆன்மநாதர் மறை கற்பித்து வந்தார்.

ஒருநாள் ஆவுடையார் கோவிலில் இருந்த அந்தணர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையே நிலத்தகராறு மூண்டது. அந்தணர்களின் நிலத்தைத் தமதென்று வேளாளர் வல் வழக்கிட்டனர். அந்தணர்கள் செய்வதறியாது திகைத்தனர். அப்பொழுது ஆன்மநாதர் அந்தணர்களிடம், "அஞ்சாதீர். பாண்டியனிடம் வழக்குரைத்து வெல்வோம். கட்டுச்சோறு கட்டி வருக'' என்றார். அவ்வாறே கட்டுச்சோறு கட்டிக்கொண்டு எல்லோரும் புறப்பட்டனர். வழியில் வீரவனம் இருந்தது. "இங்கு தங்கி வீரசேகரரை வணங்கிச் சென்றால் வழக்கு வெற்றி பெறும்'' என்று ஆன்மநாதர் கூறினர். உடனே அந்தணர்கள் அனைவரும் வீரவனத்தில் தங்கி வீரசேகரரை வணங்கினர். கட்டுச்சோறு உண்டு இரவைக் கழித்தனர்.

மறுநாள் புறப்பட்டு மதுரை சென்று பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்தனர். மன்னன் இருதரப்பினரையும் விசாரித்தான். "நிலம் உமதே என்பதற்கு என்ன சாட்சி?'' என்று மன்னன் கேட்டான்.

"எங்கு தோண்டினாலும் நீர் ஊரும். இதுவே எங்கள் நிலம் என்பதற்குச் சாட்சி'' என்று வேளாளர் கூறினர்.

"எங்கே மண்வெட்டியால் வெட்டினாலும் நீர் ஊறும். இதுவே எங்கள் நிலம் என்பதற்குச் சாட்சி'' என்று ஆன்மநாதன் கூறினார்.

உடனே பாண்டிய மன்னன் தலைமையில் எல்லோரும் ஆவுடையார் கோவில் வந்தனர். பாண்டியன் வேளாளர்களை மண்வெட்டி கொண்டு நிலத்தை வெட்டப் பணித்தான். வேளாளர்கள் எங்கே வெட்டினாலும் நீர் பீறிட்டது. வேளாளர் அஞ்சினர்; அந்தணர்கள் அதிசயித்தனர். அரசன் ஆச்சரியப்பட்டான். எல்லோரும் ஆன்மநாதரை நோக்கினர். ஆன்மநாதர் மறைந்தார். அசரீரி கேட்டது........ "நாம் வீரவனத்தில் உருவுடையோம். (சிவலிங்கம்). இக்குருந்த வனத்தில் உருவிலி,'' என்றது அசரீரி. அன்றுமுதல் நீர், பெருந்துறையாகப் பெருகியதால் ஆவுடையார் கோவிலுக்குத் திருப்பெருந்துறை என்ற பெயர் ஏற்பட்டது. ஆவுடையார் கோவிலில் உள்ள மூர்த்திக்கும் "ஆத்மநாதர் என்ற பெயர் ஏற்பட்டது. அவருக்கும் வீரசேகரருக்கும் **புழுங்கலரிசிச் சோறு** நைவேத்தியம் ஏற்பட்டது.

வீரவனப் புராணம் : சாக்கோட்டைத் தலம் பற்றி ஏராளமான புராண, இலக்கிய நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் முக்கியமானது வீரவனப் புராணம் ஆகும். கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய தமிழ்ப்புலவரான **மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை** அவர்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்து வீரவனப் புராணத்தைச் சொற்சுவை பொருட்சுவை ததும்ப 704 செய்யுள்களாக எழுதி உள்ளார். அதனைக் கோவிலூர் சிதம்பரசுவாமிகளிடம் ஞான நூல் பயின்ற புதுவயல் அழகப்ப செட்டியாரும், புதுவயல் ப. வடு. வினைதீர்த்தான் செட்டியார் மகன் வீரப்ப செட்டியாரும் முயன்று 1903-ம் ஆண்டு அச்சிட்டார்கள். அப்புராணத்திலிருந்துதான் சாக்கோட்டைத் தல வரலாறு தெரிய வருகிறது. வீரவனப் புராணத்தில் உள்ள சில முக்கிய பாடல்கள் வருமாறு :

அழகு விநாயகர்

சீர்பூத்த பொதுவடியர் சிறப்படியர்
    பாற்பொதுவும் சிறப்பு நாளும்
கூர்பூத்த அவர்உயிரா மெய்ப்புணர்வு
    மாய்ப்பொலிதல் குறிப்பில் தோன்ற
நார்பூத்த பொதுச்சிறப்புப் புணரெழுத்தால்
    ஆமழகு நாமம் பூண்டு
கார்பூத்த வீரவனத் தமர்கடாக்
    களிற்றின் அடி கருதி வாழ்வாம்.

உமையம்மை

பாயமலர்க் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையும் பசிய தோளும்
மேயஅருள் பொழிவிழியும் திருமுகமும்
மங்கலப்பொன் மிடறும் தேசின்
ஆயபர ஞானநிறை கொங்கையும்செங்
கையுமருங்கின் அவிர்செம் பட்டும்
தூயமறை முடிபுணரா உமையம்மை
திருவடியும் துதித்து வாழ்வாம்.

சிவநேசச் செல்வர்கள்

வையகம் பரவும் வீர
வனச்சிவ பெருமான் கோயில்
மெய்யகம் படித்தொண் டாற்றும்
விருப்பினர் நீற்றுச் சார்பு
பொய்யகம் தவிர்த்துக் கொண்ட
புண்ணிய ராய யார்க்கும்
ஐயகம் படியச் செய்வாம்
அரும்பெறல் இலாபம் ஓர்ந்தே !

கண்டன் எனும் சோழன் வீரசேகரரை வணங்கல் :

ஒருமல வலியான் என்றும்
இருவினை உடையான் என்றும்
வெருவுமும் மலத்தான் என்றும்
விளம்பினர் விளம்பி நிற்க
அருள்கனிந் தென்னை ஆண்டாய்
ஆண்டதற் கியையு மாறுன்
பொருவிலா ஞானம் ஏத்தி
பூரண நந்த வாழ்வே !

திரிபுரம் எரித்தான் போற்றி
தீமழுத் தரித்தாய் போற்றி
கரியற உரித்தாய் போற்றி
கலைபல விரித்தாய் போற்றி
அரியுடல் பரித்தாய் போற்றி
அடியர்மா சிரித்தாய் போற்றி
விரியறம் தெரித்தாய் போற்றி
வீரைஅங் குரித்தாய் போற்றி
ஒளிகெழு பிழம்பே போற்றி
உமையவள் மணாள போற்றி
அளிகொள்எண் ·குணத்தாய் போற்றி
அமைந்தவெட் டுருவாய் போற்றி
குளிதவிர் வீரை மூலம்
முளைத்தெழு சுடரே போற்றி
தெளிபவர்க் கினிக்கும் வீர
சேகரப் பிரானே ! போற்றி.

கண்டன் உமையவளை வணங்குதல்

உருகுமென் அடியர் உள்ளத்
தொளிவளர் விளக்கே போற்றி !
கருகுவன் மலநோய் நீரக்
கடைக்கணித் தருள்வாய் போற்றி !
பெருகுபல் லறமும் நாளும்
பெயர்வற அமர்ந்து வாழும்
குருகுமுன் கையாய் போற்றி !
குலமலை மருந்தே போற்றி !

உமையவளை வழிபடுவோர் பெறும் பேறு:

உமையவளை வழிபட்டால் எண்ணியது எய்தும்; நோய்கள் தீரும். துயரம் தொலையும் சோழா குளத்தில் நீராடி, உடையை உலர்த்தாமல் மல்லிகைக் கோவிலை வலம் வந்து, வெள்ளிக்கிழமை தோறும் மாவிளக்கிட்டு, நாற்பத்தைந்து நாட்கள் வழிபட்டால் மலடிக்கும் மக்கட்பேறு வாய்க்கும். சாத் கோட்டைத் தலத்தில் ஒரு நாளாவது தங்கியிருந்து வழிபட்டால் பெரும் பேறு கிடைக்கும்.

நூற்பயன் : வீரவனப் புராணத்தைப் படிப் போரும், கேட்போரும் இம்மை மறுமை இருமை யிலும் இன்புறுவர். இந்நூலை வீட்டில் வைத் திருந்தால் செல்வம் பெருகும்.

வாழ்த்து

காமேவு திருவீரை நகர்வாழ்க
உமையாண்டாள் கருணை வாழ்க
பாமேவு வெண்ணீறும் கண்மணியும்
ஐந்தெழுத்தும் பரவி வாழ்க !
தேமேவு வீரசேகரர் வாழ்க !
அவர் அடியார் செறிந்து போற்றப்
பூமேவு மணிமன்றுள் இனிதெடுத்த
குஞ்சிதச்செம் பொற்றாள் வாழ்க !

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் : மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் எழுதிய வீரவனப் புராணத் தை, அவரது தனிப்பெரும் சீடராகிய தமிழ்த் தாத்தா உ. வே. சா. அவர்கள் இருபதாம் நூற் றாண்டில்—அதாவது 1903 ஆம் ஆண்டில்—வெளி யிட்டுள்ளதோடு அரும்பதவுரையும் கொடுத்துள் ளார்கள். அந்நூலில் உ. வே. சா. அவர்கள் வீர சேகரப் பெருமானைப் பாடிப் பரவியுள்ள ஒரே ஒரு முகவுரைக் கவிதை வருமாறு :

துன்றுபலத் தோளான் சுகுணவழு திக்குமரம்
ஒன்றுபல வாம்விரை யூர்முறையொன் றின்றுபல
ஆயதிறும் பூதோ அளகைப் பரங்கருணை
எயதெனின் முற்றுத தென் ?

ஸ்ரீ உமையாண்டவள் கும்மி : பரம்பரைப் புலவரும், இராமநாதபுர-சிவகங்கை சமஸ்தானங்களின் வித்துவானும் ஆகிய வேம்பத்தூர் "சிலேடைப்புலி பிச்சுவையர்" அவர்கள் "ஸ்ரீ உமையாண்டவள் கும்மி" எனும் அரிய சந்த நூலை எழுதி இருக்கிறார். அந்நூலானது உமையவள் பெருமையை விளக்குகிறது. அந்நூலில் உள்ள சில முக்கிய பாடல்கள் வருமாறு:

தீர மிகும்அள காபுரி மேவிய
தேவியின் மேற்கும்மிப் பாட்டுரைக்கத்
தாரணி பூரண புட்கலை யோடுறை
சாத்தன் இருபதம் எத்துவமே.

சந்த்ர சடாதரி நித்யகல் யாணிஎன்
சாம்பவி மேற்கும்மிப் பாட்டுரைக்க
அந்தரத் தோர்புக ழுஞ்சிங்க வாகனத்
தார்ந்திடும் உய்யவந் தாள்துணையே !

பாட்டில் உயர்ந்திடு நால்வர் தமிழெனப்
பாண்டிய தேசத்தினில் இருக்கும்
நாட்டில் உயர்பிரம் பூர்நாட் டின்வளம்
நங்கையரே சொல்லக் கேளுங்கடி !

வள்ளல் எனும்வீர சேகர மூர்த்திமுன்
வந்து முளைத்த வரலாறும்
கள்ளவிழ் சோலை திகழும் அளகையில்
கன்னியரே சொல்லக் கேளுங்கடி !

வீதியில் அன்னக் கொடியா டும்மறை
வேள்விப் புகைமுகில் போல்நீடும்
ஆதிபகவான் தனைப்பாடும் அடி
யார்வர வைத்தினமுந் தேடும்.

விண்ணை அளக்கும் மணிமே டைகதிர்
வெம்பரி ஒட்டும் கொடியாடை
தண்ணுமை நாத சுரமே எம்இரு
தங்க முரசம் காதாளம்.

மாதர் மருகின் இடக்தோ றும்புவி
மான்களைப் போலத் தோனிமீறும்
பாதல மீதா விற்புகழே தங்கும்
பாம்பின் தலையில் உறும் அகமே !

பேதைய ரேபிரம் பூர்நாட்டை உற்ற
பேர்புகழ் போலும் உயர்கோட்டை
கோதையர் ஊடலில் வீசணி யேமறு
கூடிருளைத் தவிர்க்கும் மணியே !

சங்கர னும்மவற் கும்மலை யான்முனி
தங்கி வளர்பொதி கைமலையான்
தங்கு மறம்பல ஆற்றி னன்பவ
சாகர மாற்று தேனுற்றினன்.

என்மனத் தைப்பிறர் பால்நாட் டாள்வயல்
எங்கும் விளைபிரம்பூர் நாட்டாள்
வன்மனத் தார்க்கரு ளைப்பதி யாள்கன
வர்த்தகஞ் சேர்அள கைப்பதியாள்.

கூன் குருடு செவிடு ஊமை
குறையிரக்கும் ஓசைகளும்
மான்க ளெல்லாம் கும்புகும்பாய்
வைத்திடு மாவிளக்கு ஒளியும்

கண்டுசொல மறைமுதல்ஆ
கமத்தாலும் முடியாது
கொண்டல்படிந் திடும்சோழ
குளமாகும் சிவதீர்த்த

மகிமையினைத் தெரிந்தமட்டும்
மாதரசே கேளுங்கடி !
செகத்தில் உள்ள சிவ
தீர்த்தமெலாம் ஒருவடிவாய்

வந்தஇந்தத் தீர்த்தமதில்
மனைவிவனைக் கைப்பிடித்துச்
சந்தமறை யோர்கள்மகா
சங்கற்பம் சொலிமூழ்கில்

புத்திரகா மேட்டியுடன்
புகழும்அ சுவமேதம்
இத்தலத்திற் செய்தபலன்
எய்துமென மறைஇசைக்கும்

கையில்ஒன்றும் இன்றிமரக்
கட்டையென வீழ்ந்தாலும்
மையல்தரும் புகழ்அரம்பை
மாதருடன் அனுபவிப்பன்

கண்டானே யாமாகிற்
காசினியோர் யாவர்களும்
கொண்டாட ஒருகுடைக்குள்
குவலயம்எல் லாம்புரப்பன்.

உமையாம்பிகை பிள்ளைத்தமிழ் : யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர் ஆணைப்படி திரிசிரபுரம் வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்கள் "உமையாம்பிகை பிள்ளைத்தமிழ்" எனும் அரிய நூலை எழுதி வெளியிட்டுள்ளார் இதில் உள்ள பாடல்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதம் போல் தித்திக்கின்றன. இந்நூலில் உள்ள சில முக்கிய வரிகள் வருமாறு:

"சங்கரர் பங்கில் விளங்கும் இளங்கிளி
தாலோ தாலேலோ !
தமிழ்தெரி அளகையின் அமிழ்துறழ்
மொழியுமை
தாலோ தாலேலோ !"

* * *

தளமலி செழும்பங்க கயக்கரம் கொண்டம்மை
சப்பாணி கொட்டி அருளே !
தண்ணளகை நண்ணிவளர் வண்ணமலி
பெண்ணரசி
சப்பாணி கொட்டி அருளே !

* * *

எதிரும் அளகா புரிக்கரசி
எடுத்தாடுக பொன் அம்மனையே !
இருக்கு முடியில் இருக்கும் உமை
எடுத்தாடுக பொன் அம்மனையே !

* * *

விண்பூத்த நதிஎள்ளி வருபெருந் தேனூற்று
வெள்ளநீர் ஆடி அருளே
வீரைமா வனம்உறையும் ஏரைமே வன
நிறையும்
வெள்ளநீர் ஆடி அருளே

* * *

மேலும் இரண்டு முக்கிய பாடல்கள் வருமாறு :

சப்பாணிப் பருவம்

கத்து கடற்புவி முற்றருள் சிற்று தரத்தாளே !
கட்டறு பத்தர் உளத்தில் இனித்த சுவைப்
பாகே !
உத்தம வெற்பிறை பெற்று வளர்த்த தவப்பேறே!
ஒப்பகல் பச்சை நிறக்கல பத்து மயிற்பேடே !
வித்தகம் அற்ற எனக்கும் அளிக்கும் அருள்
தாயே !
வித்துரு மச்சடை யத்தர் பிடித்த கரத்தாலே
கொத்தலர் மொய்த்த குழற்கொடி கொட்டுக
சப்பாணி !
குற்றமகற்று அளகைக்குபில்கொட்டுக சப்பாணி!

வருகைப் பருவம்

அறையு நிறையு நதியு மதியும் அரவும்
விரவு மத்தமும்
அலரும் இதழி மலரும் முடியில் அணியு
மிறையிடத்துமா

மறையின் முடியு நசையு முனிவு மயலு
நனிசெ றித்துற
வளருமிழிவு மலிஎன் உளமும் மருவி
உறையும் உத்தமி !

நறையு மதுவும் உறுநன் மலரின் நனிசெ
யடிய நச்சனை
நவிலும் இனிய துதியுள் உருகு நலமு
மொருவில் பத்திபே

நிறையும் அடியர் பிறவி களைய நினைவள்
தருக முத்தமே
நிலவு புரிசை சுலவும் அளகை நிமலி
தருக முத்தமே !

அளகை அஷ்டப் பிரபந்தம் : புதுவயல் திரு. நா. அ. சண்முகம் செட்டியார் இயற்றி 1935 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள "அளகை அஷ்டப் பிரபந்தம்" என்னும் நூல் அற்புதமாக அமைந்திருக்கிறது. இந்நூலுக்குப் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் "சாற்று கவி" வழங்கி உள்ளார்கள். இந்நூல் வீரசேகரர் சந்நிதி முன் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

இந்நூலில் (1) அளகைக் கலிவெண்பா 69 பாடல்கள், (2) அளகை வெண்பாமாலை 100 பாடல்கள், (3) அளகைச் சிலேடை வெண்பா 100 பாடல்கள், (4) அளகை வெண்பா அந்தாதி 100 பாடல்கள், (5) அளகைப் பதிற்றுப் பத்துப் பதிகம் 100 பாடல்கள், (6) அளகை அலங்காரம் 100 பாடல்கள் (7) அளகை உமை அந்தாதி 100 பாடல்கள், (8) அளகை உமையம்மை பிள்ளைத்தமிழ் 100 பாடல்கள், ஆக மொத்தம் 769 பாடல்கள் உள்ளன. இந்நூலில் உள்ள சில முக்கிய பாடல்கள் வருமாறு :

(1) அளகைக் கலிவெண்பா

பூவாழ் அயன் அறியாப் பொற்சடையா! எம்
அளகைத்
தேவா ! செழுஞ்சோதி ! தீவண்ணா ! — மாவாழி
மானுடு செந்தா மரைப்பாதா ! நால்வருக்கா
ஆனடுஞ் சாக்கைநகர் அத்தா ! பூந்தேனடு

கொன்றைக் கிசைந்தபுயக் கோமானே !
வில்வவனத்து
என்றைக்கும் நீங்காது இருப்போனே !

* * *

பாரையடி பற்றியொரு பார்வேடர் தாக்கியநாள்
விரையடி மொத்துண்ட வீரேசா !

* * *

கூற்றுச் சமணர் குழுக்குலைத்துக் கூர்ங்கழுவில்
ஏற்றும் தமிழ் மதுரை எம்மானே !

* * *

பாகாஉன் பாதமலர்ப் பற்றின்றி ஏதுமிலேன்
நாகா பரணு ! நகைமுகம்செய் — ஏகாநான்
பட்டதுயர் சொல்லஒரு பாரதமா நீஅறிவாய்
மட்டதுண்டோ நோய்தீர்க்கு மாமருந்தே !
—நட்டமிடும்
தேவா !என் பார்க்குதவும் தெய்வமே !
எம் வைப்பே !
பாவாணர் போற்றும் பரசிவமே ! — காவாயேல்
காக்கக் கடன்எவர்க்கோ ? காசினியில்
உன்னையலால்
சாக்கைத் தலம்வளர்ந்த சம்புவே !

* * *

கல்வனைத்த தேவே ! கலிவளைக்கச் செய்த
தெவன் ?
வல்வளைக்கை பாதி பகிர்மெய்யா !

(2) அளகை வெண்பாமாலை : முக்கிய பாடல்கள்

எத்தி மனைதோ றிரப்பான் ; பலதேவர்
அத்தி புனைவான், அரவசைப்பான் —தித்தி
எனும்
ஆட்டினன்: அங்கை அனல்எடுப்பான் நல்வேதப்
பாட்டினன் வீரைப் பரன் !

பஞ்சரத்துப் பைங்கிளியைப் பாவிநான் தூது
விட்டேன்
குஞ்சரத்துத்தோல்போர்த்த கோமான்பால்
— வெஞ்சரத்து
மாரற்கு மாவாகி வஞ்சித்த தாய்வீரை
வீரற்குச் சொல்வாய் விரைந்து.

பூவேந்த ராய்இப் புவனமெலாம் ஆள்வதிலும்
பாவேந்த ராயிற்பயன்பெரிதால்-ஆவேந்தும்
தேவா ! அளகைச் சிவமே!என்பால் வாணி
தாவா திருக்கவரம் தா !

வித்திருக்கும் கூழ்போல் விமலையுடன் நீ இருக்க
மத்திருக்கும் பாலாய் மயங்கினேன்
—சத்திருக்கும்
மாசடையா தேவா ! வரதனெனும் வீரையம்மாள்
மாசடையா தேயருள்செய் வாய்.

கையடுத்த வெண்டலையும் காலடுத்த
கிண்கிணியும்
மெய்யடுத்த தீவண்ண மேன்மையோடு
—மையடுத்த
கண்டமும்கண் டொப்புக் கழறுவார் வீரேசா !
விண்டனை அந்தோ விதி.

திரைகொழிக்கும் சங்குடைப்பத் தேனூற்றும்
பண்ணை
விரைகொழிக்குத் பைங்கழைசூழ் வீரை
—வரைகுழைத்த
நந்திப்பேர் நாயகனை நான்தழுவ வானேறே
வந்திப்பேன் கொண்டாடி வா.

தேன்பிடித்த பூங்கொன்றைத் தேவாநின் செம்
மலர்த்தாள்
நான்பிடித்தேன் எள்ளாமல் நன்கருள்வாய்
— மான்பிடித்த
மாறலையும் வாணிதலை வன்தலையும் சேர்த்தாடும்
ஆறலையும் செஞ்சடை வீரா !

ஆறுபத்து நாலுவினை யாட்டுடையா !
மார்க்கண்டர்க்கு
ஆறுபத்து வாழ்நாள் அளித்தசிவா ! —
கூறுபத்து
வத்திரனுக் கும்அருள்செய் வள்ளால் !உன்
சீர்த்திசொல
எத்திறனன் வீரை இறை.

உள்ளிற் சிவானந்தம் ஊறுமே ; நஞ்சிறுமை
தள்ளிப் பேரின்பம் தருமரோ !
— வெள்ளிமலைப்
பித்தன்மா தேவன் ; பிறைசூடி வீரைஉமை
அத்தன்மால் காணு அடி !

சேலாடும் கண்ணிதனைச் செம்பாதி வைத்த
மெய்யா !
சூலாடும் கையா! சுடர்மணியே! —மாலாயும்
பாதா ! அளகைப் பரமேட்டி ! தாகூற்றை
வாதாடி வெல்லும் வரம்.

அம்பொற் கிழிஅவிழ்க்க அந்தணர்க்குச்
செந்தமிழ்ப்பா
தம்பொற் கரத்தெழுதித் தந்தசிவா !
— துன்பகலத்
தாதா வளம்பலவும் தாதாநீ தாநடன
பாதா அளகைப் பரா !

(3) அளகைச் சிலேடை வெண்பா

தாரணிவான் போற்றுமுமை தையலா சூடியெறி
யாரணிவா மஞ்சூழ் அளகையே !—நீரணியார்

பொற்கொன்றை ஈவார், புரிசடைவைப்
பாரளிய
ஏற்கொன்றை ஈவார் இடம்.
நித்தமலர் வேங்கைகளும் நீடருவி னித்திலமும்
அத்தஞ் சொரியும் அளகையே—பத்தருக்கா
வேடுவரைத் தாங்கினர் வீரையடி மூலங்கல்
வேடுவரைத் தாங்கினர் வீடு.

(4) அளகை வெண்பா அந்தாதி

சோதிக்க நான்தரமோ சூழ்ச்சிகொண்டு
மால்பிரமன்
வாதிக்கச் சோதிமயம் ஆனவா —நீதிகொன்
றல்லாது காணேன் அளகையா ! வேறேதும்
சொல்லாது தாதா சுகம்.

(5) அளகைப் பதிற்றுப்பத்துப்பதிகம் :

சங்கேந்தும் திருமாலும் தாமரைவாழ்
நான்முகனும்
எங்கோவே என்றேத்தும் இறைவனலை
நஞ்சுண்டான்
வெங்காலன் தனையட்ட வீரன்உமா பதிஅளகை
அங்காமற் பொடித்தபிரான் ஆண்டதும்ஓர்
அற்புதமோ

(6) அளகை அலங்காரம்

இலங்கையி லாய மலையான் அளகை இறை
அரக்கன்
இலங்கையி லாய மலையச் செற்றன்றெழு
மேந்தலெங்கும்
இலங்கையி லாய மலையிடத்தான் புகல்
இன்றி எங்கும்
இலங்கையி லாய மலைக்காட்டும் கூற்றுறின்
என் துணையே.

(7) அளகை உமை அந்தாதி : சில பாடல்கள்

சேலோ கருங்குவளையோ மயிலுறை
சேவகன்கை
வேலோ கணையோ விரிகடலோ வடவோ
மினிரோ ?
ஆலோ அமுதோ அறிகிலன் யாதோ ?
அறைதி நின்கண்
மாலோடு அயன்மறைநின்றுஏத்தும்
மாதரசே !

நல்லாய் உடற்சுமை வேண்டேன் உனது
நளினபதத்து
அல்லாதோர் ஆதாரமில்லை கண்டாய்
உமை ஆரணங்கே !
கல்லாதவன் தனக்கு இல்லைஎன்றால்
வீரைக் காட்டினிடைப்
புல்லாய்ப் பிறக்கும் படியா கிலும்அருள்
பொற்கொடியே!

வாதிட்ட கூற்றுவனை மார்க்கண்டன்
பூசித்துப்
போதிட்ட காலாற் புடைத்தசிவா—காதிட்ட
பாப்புக் குழையா ! பழியஞ்சி வில்வவனு !
தீப்புக்கு நோய்மாளச் செய் !

எழுதா மறைகளுக்கும் எட்டாத தாளைத்
தொழுதாரன் றேபிறவி தோயார்
— விழுதாரும்
செஞ்சடையார் தேவிஉமை சீரடியை
ஏத்திக்கண்
பஞ்சடையா முன்னே பணி !

(8) அளகை உமையம்மை பிள்ளைத்தமிழ்

மலரழ கியமுக மதியா டுறசெவ் வாய்நகை
முத்தாட
வளரொளி விடுதிரு நுதலணி யாடுற மகரக்
குழையாட
குலநவ மணிவட மாடுற. உச்சிக் கொண்டை
அசைந்தாட
கொங்கை மலைபொறை யாலிடு கிடையோர்
கொடியில் அசைந்தாட

விலைநிக ராமணி மேக லையாடுற மென்கால்
அணியாட
விரைசெறி மஞ்சரி யாமென மரகத மேனி
குழைந்தாட
அலகறு புவன சராசர மாடிட ஆடுக
செங்கீரை
அம்பிகை மாதள காநகர் மேவுமை ஆடுக
செங்கீரை.

வண்டுகள் கிண்டி விருந்தய ரும்புய
வானவ னின்றாட
மலரய னெடுநிலன் உழுதுண் செங்கண்
மாலும் உவந்தாட
தெண்டிரை நங்கை ததும்ப அராவொடு
திங்களும் உறவாட
செம்பவ ளத்தொளிர் வேணியும்
ஒரெண் திக்கும் விரிந்தாட

தொண்டர்கள் அஞ்சலி செய்யும்
மலர்த்தாள்
தூக்கி மகிழ்ந்தாடும்
சுந்தர மாநட ராசர் நினக்கெதிர்
தொந்தோம் என்றாட

அண்டினர் தீவினை விண்டு சுகம்பெற
ஆடுக செங்கீரை
அம்பிகை மாதள காநகர் மேவுமை
ஆடுக செங்கீரை

வீரசேகர மணிமாலை-திருவிரட்டை மணிமாலை:

மறையோல் இடுமணி மாதார் இடமலி
மாலயன்முன்
மறைமா முடிமணி வான்மணி என்று
வழுத்துமணி
மறையோர் துதிமணி மாண்பார் பதிமணி
மாறின்மணி
மறைசூழ் அளகை உமாவீர சேகர
மாமணியே!

அருமா மறைமுடிக் குள்ளே திகழ்மணி
அம்மறைக்குந்
தெரியா மறைமணி யுஞ்சவர் நெஞ்சகச்
செம்பொன்மணி
அருளே பொழிமணி அன்பே கொளுமணி
யாத்தமணி
வருவான் அளகை உமாவீர சேகர
மாமணியே!

தேவகோட்டை வன்றொண்டர் எனும் நாராயணன் செட்டியாரின் மாணவரும் காரைக்குடியில் பெரும்புகழ் பெற்ற புலவரும் ஆகிய சொக்கலிங்க ஐயா எனும் ராம. கு. ராம. சொக்கலிங்கம் செட்டியார் இயற்றிய "வீரசேகர மணிமாலை-திருவிரட்டை மணிமாலை" சாக்கோட்டைத் தலத்தின் சிறப்பைச்சிறப்பாகப் புலப்படுத்தக்காண்கிறோம்

உமாவீரேசர் போற்றிக் கலிவெண்பா :

புதுவயல் புலவர் மணி நடராசபுரம் சோமசுந்தரம் செட்டியார் இயற்றி, 1960-ஆம் ஆண்டு நிகழ்த்திய கும்பாபிஷேகத்தின் பொழுது வெளியிட்டுள்ள உமாவீரேசர் போற்றிக் கலிவெண்பா 146 அடிகளில் சுருக்கமாக வீரவனப் புராணத்தைக் கூறுகிறது.

சாக்கை வரலாறு :

புதுவயல் சங்கீத வித்துவான் ஆகிய வீரப்பா அவர்கள் வீரவனப் புராணத்தைச் சுருக்கமாக 35 இசைப்பாடல்களாக இயற்றி "சாக்கை வரலாறு" எனும் நூலாக 10-2-1960 அன்று நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின் பொழுது வெளியிட்டுள்ளார். இப்பாடல்களை மணிமுத்து பாகவதர் மேற்படி நாளில் பாடி அரங்கேற்றினர்.

கண்ணொளி பெற்ற அதிசயம் :

தேவகோட்டை இராமநாதன் செட்டியார் என்பவர் சுமார் 25 ஆண்டுகட்கு முன்பு சாக்கோட்டையில் 45 நாட்கள் தங்கியிருந்து வீரசேகரரையும் உமையவளையும் வணங்கிக் கண்ணொளி பெற்ற அதிசயத்தைப் பலரும் அறிவர். இந்நிகழ்ச்சி "சாக்கை வரலாறு" என்ற நூலில் இசைப்பாடலாக அமைந்துள்ளது.

இராகம் : வந்தனதாரிணி தாளம் : ஆதி

பல்லவி

தெய்வமே இல்லை என்ற திடமான பொய்யை
நம்பும்
ஐயா சாக்கை நிகழ்ந்த அதிசயம் ஒன்றுகேள்.

அனுபல்லவி

வையம்புகழ் தேவகோட்டை வாழும் தனவணிகர்
மெய்யடியார் கண்கெடவே மிகவும் துயர்கொண்
டார்

சரணம்

வீரசேகரர் உமை வீற்ற சாக்கை வந்தார்
நீராடி ஓர்மண்டலம் நின்றார் உமை முன்னே
தீராத நோய்தீர்க்கும் தெய்வமே என்கண்ணைப்
பாராயோ எனக்கதறப் பளீரென ஒளிபெற்றார்.

உய்யவந்தம்மன் : சாக்கோட்டையில் தனிக் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் உய்யவந்தம்பாளையம் வணங்கி உய்வு பெற்றோர் பலர்.

கல்வெட்டுகள் : வீரசேகரர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் கி. பி. 12-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவை ஆகும். இவ்வற்றில் 34 கல்வெட்டுக்கள் தமிழக அரசால் படியெடுக்கப் பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இக்கல் வெட்டுக்களில் உள்ள சில வாசகங்கள் நம்மைப் பெரிதும் ஈர்க்கின்றன.

"வானேக்கிய மரமும் நிலனேக்கிய கிணறும்", "சந்திராத்த வரை" (சந்திரன் சூரியன் உள்ள வரை) என்பன போன்ற இனிய வாசகங்கள் பல கல்வெட்டுகளில் உள்ளன. இக்கல் வெட்டுகள் புலவர் வகுப்புகளுக்குப் பாடமாக வைக்கத்தக்கன. இவற்றில் இருந்து கி. பி. 12-ஆம் நூற்றுண்டுச் சரித்திரத்தை ஒருவாறு அறியலாம்.

அடியேன் பாடல் : ஏராளமான பாடல்களைப் பெற்று எழிற்காட்சி வழங்கும் வீரசேகரர் உமையவள்மீது அடியேனும் புதிய பாடல் புனைந்து வழிபடுகிறேன்.

1. "பெய்யும் மழைபோலப் பேரருளால் காப்பாற்றும்
உய்யவந் தம்மன் உணர்."
2. "நமையெல்லாம் அன்பு நயனத்தால் பாலித்(து)
உமையவளே காப்பாள் உவந்து."
3. "நம்வீர சேகரராம் நற்றெய்வம் எந்நாளும்
இம்மை மறுமைக்கும் ஏர்."
4. சாக்கோட்டைத் தலத்தினிலே கோயில் கொண்டு
"சரித்திரத்தைக் கல்வெட்டாய்க் காட்டி நின்று
பாக்கோட்டை எழுப்பிநிதம் புலவோர் நாவில்
பாராளும் உமையவளே ! பணிவோர்க் கெல்லாம்
தாக்கேதும் வாராமல் நோய்கள் நீங்கித்
தடையேதும் இல்லாமல் வளர்ச்சி செய்ய
வாக்கோடு மனம்மெய்யால் வணங்கு கின்றோம்
வயல்பார்க்கும் உமையவளே ! காப்பாய் அம்மா !

சாயக்கோட்டை என்னும் அழகாபுரி உமையவள் ஆனந்தப் பிள்ளைத்தமிழ்

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு "குருமுறை" என்னும் நூல் அச்சிடப் பெற்று வெளியிடப் பெற்றுள்ளது. இதற்கு சபாபதி முதலியார், சச்சிதானந்தம்பிள்ளை என்னும் புலமைச் செல்வர் இருவர் சாற்றுகவி வழங்கி உள்ளனர். அவற்றின் வாயிலாக இந்நூலை இயற்றியவர் மதுரைச் சிவசுப்ரமணிய தேசிகர் என அறிகிறோம். இந்நூலில்,

1. "சுபேத சிகாமணி" 56 செய்யுட்களும்,
2. "கழனிவாசல் திருவருணாசல தேசிகரத்நப் பிள்ளைத் தமிழ்" 101 செய்யுட்களும்,
3. சாயக்கோட்டை என்னும் "அழகாபுரி உமையவள் ஆனந்தப் பிள்ளைத் தமிழ்" 101 செய்யுட்களும்,
4. "மரகத முத்துமாணிக்கத் திருப்புகழ்" 3 செய்யுட்களும்,
5. "இராயபுரம் பதிற்றுப் பத்து அந்தாதி" 102 செய்யுட்களும் உள்ளன.

இதில் உமையவள் ஆனந்தப் பிள்ளைத்தமிழ்" பகுதியில் உள்ள சில முக்கிய வரிகள் வருமாறு :

"அணிவளம் மிகும் அழகாபுரி உமையவள் ஆடுக செங்கீரை"
"மதுரத் தமிழ் வளர் அளகைப்பதி உமை தாலோ தாலேலோ."
"விரிதிரை கொழிக்கு மதி நதிகரை புரண்டுவரும்
வெள்ளநீர் ஆடி அருளே."

எளிய மனம் இவள் வீடு!

C.N. நாச்சியப்பன்

புன்னைவனப் புதுத்தோப்பில்
பொங்குமொலி மணியோசை
அன்னையெனும் ஆனந்தி
அழகான ரூபமயில்.

வீரவனப் புராணத்தாள்
வெற்றிதரும் செல்வத்தாள்
காரணமாம் பூரணியாள்
கண்மலரும் பொன்மலராள்.

உமையவளாம் இமையவளை
உய்யவந்த பெருமகளை
கலைமகளை அலைமகளை
கருமாரித் திருமகளை

கைதொழவே உய்திடுவோம்
கனகமணித் தொட்டிலிலே
ஐயமில்லாச் செந்தமிழும்
ஆனந்தத் திருவருளும்

கற்பகப் பெரும்பொருளும்
கண்மயங்கும் கவர்ச்சிகளும்
அற்புதமாய் இவள் தருவாள்
அருளோடு பொருளீவாள்,

எல்லாம் இவள்செல்வம்
. எளியமனம் இவள்வீடு!
வெல்லக் கவிச்சுவையே
வெற்றியின் கூடாரம்.

உமையவள் திருவடிகள்
உலகில் பூத்தமலர்
சுமைதீர்த்துச் சுகமருளும்
சொர்க்கத்தின் பெருநிழலாம்.

காவியத் தலைவியிவள்
கடைக்கண் பார்த்திடுவாள்
ஆவியும் காத்திடுவாள்
அன்புமுகம் காட்டிடுவாள்.

சாக்காட்டுத் துன்பங்களைச்
சாக்கோட்டை உமையவளே
பூக்காடாய் மாற்றிவிடும்
புதுமைநலப் பேரரசி!

புதுவயல் எல்லையிலே
புலவர்கள் சொல்லினிலே
மதுவயல் சுவையினிலே
மனவயல் உழுதிடுவாள்!

ஆத்மப் பெருநலங்கள்
அன்புடைய வள்ளன்மை
கூத்தாட்டும் சூத்திரத்தாள்
குணநலப் பாத்திரத்தாள்.

தைத்திங்கள் சோமவாரம்
தரணிபுகழ் குடமுழுக்கு
கையெடுக்கக் காத்திடுவாள்
கருணைமனம் பூத்திடுவாள்.

இனிய செய்தி
4—1—1981 தினமணி

ஞாயிறுமலர் சுடரில் "சாக்கோட்டை ஸ்ரீ வீரசேகர உமையாம்பிகை" என்ற தலைப்பில் பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரன் எழுதி உள்ள கட்டுரையினை ஒரு பக்க அளவில் புகைப் படங்களுடன் வெளியிட்டுள்ளார்கள். அதற்காக மலர்க்குழு தினமணி ஆசிரியருக்குத் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

திருக்கோயில் வழிபாடு

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஒருவரே பரமபதி. அவர் ஒருவரே எல்லோராலும் வழிபடப்பெறுபவர். அவர் ஒருவரே யாரையும் வழிபடாதவர். என்றும் உள்ளவராயும், எங்கும் நிறைந்தவராயும், இயல்பாகவே பாசங்கள் நீங்கியவராயும், எல்லாம் அறிபவராயும், எல்லாம் செய்பவராயும், இன்ப வடிவினராயும், தம் வயமுடையவராயும் இருப்பதாலேயே, சிவபெருமான் முதற்பெருங் கடவுளாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

சிவபெருமானுக்கு அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று வடிவங்கள் உள்ளன. இவற்றுள் அருவுருவத் திருமேனி கொண்டு மூலத்தானத்திலும், உருவத்திருமேனி கொண்டு திருக்கோயிலிலும் எழுந்தருளியிருந்து எல்லா உயிர்களுக்கும் சிவபெருமான் அருள்புரிந்து வருகின்றார். சிவாலயத்தில் சிவபெருமானது பரிவார மூர்த்திகளும் எழுந்தருளியிருப்பார்கள்.

மூலத்தானத்திலுள்ள அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் ''ஆவுடை'' என்னும் பீடத்துடன் கூடியிருக்கும். இதில் சிவலிங்கம் சிவமும், ஆவுடை சிவசத்தியும் ஆகும். இதைச் ''சதாசிவ மூர்த்தி'' என்று அருள் நூல்கள் கூறும். சிவபெருமானது உருவத் திருமேனிகள் பல. அவற்றுள் சந்திரசேகரர், உமாமகேசர், இடபாருடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரர், நீலகண்டர், சக்கரப் பிரதர், கசமுகாநுக்கிரர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்னும் இருபத்தைந்து மூர்த்தங்களும் குறிப்பிடத்தக்கவை.

சிவாலய தரிசனம், நாடோறும் செய்தல் வேண்டும். தோய்த்துலர்ந்த ஆடையணிந்து, அவரவர்கள் நிலைக்கேற்றபடி அநுட்டானம், ஆன்மார்த்த பூசை ஆகியவற்றை முடித்துக் கொண்டு, தேங்காய், பழம் முதலிய பொருள்களுடன் திருக்கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும். கால்களைக் கழுவி ஆசமனம் செய்து தூல லிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தொழுது, கைகளைச் சிரசின் மேலே கூப்பிச் சிவ நாமங்களை உச்சரித்துக்கொண்டு திருக்கோயிலினுள்ளே செல்லுதல் வேண்டும்.

கொடிமரத்துக்கு முன்னால் ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று முறை செய்தல் வேண்டும். ஒன்று இரண்டு செய்வது குற்றம். தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்புகளும் நிலத்திற் பொருந்த வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம். தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்புகளும் நிலத்திற் பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம்.

கொடிமரம், பலிபீடம், இடபதேவரை வணங்கிப் பின்னர், கணநாதராகிய திருநந்திதேவரையும், துவார பாலகரையும், துவார விநாயகரையும், வணங்கிச் சிவலிங்கப்பெருமான் சந்நிதியில் அருச்சனை செய்வித்து, அருட்பாடல்களை ஓதித் திருநீறு வாங்கித் தரித்துக்கொண்டு உமாதேவியார், சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, விநாயகர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர், பைரவர் முதலிய மூர்த்திகளையும், சமயாசாரியர், அறுபான்மும்மை நாயன்மாராகிய மூர்த்திகளையும் வணங்கி வழிபடுதல் வேண்டும்.

விநாயகர் திருமுன்பு சுண்டுவிரல்கள், கட்டைவிரல்களை நீட்டி முட்டியாகப் பிடித்த கைகளினால் நெற்றியில் மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு மூன்று முறை தோப்புக்கரணம் (உக்கி) போட்டு வழிபடல் வேண்டும். விநாயகர் மட்டும் தனியே எழுந்தருளியுள்ள திருக்கோயில்களில் ஒன்று அல்லது

ஸ்ரீ உய்யவந்தம்மன்
(முழுதும் வெள்ளி அங்கி சாத்திய கோலம்)



சாக்கோட்டை ஸ்ரீ உய்யவந்தம்மன் கோயில், நுழைவாயில் தோற்றம்



முத்தமிழ் முழங்குக!

சிலம்பில் செட்டிநாடு

புலவர் பழ. முத்தப்பன், M.A., புதுவயல்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் முடி மன்னர் மூவேந்தர் காலத்து எழுந்தது என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. அவர்தம் காலத்தில் நால்வகை வருணத்தார் இருந்தனர் என்பதும், அவர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பதாஉம் இலக்கண நூல்களிலிருந்து பெறப் படுகிறது. நால்வகை வருணத்தாருள் அரசரை அடுத்து வைக்கப்பெறுபவர் வணிகரே ஆவர். அவ்வணிகர்குலத் தோன்றலாம் மண் தேய்த்த புகழினன் ஆகிய கோவலனைப்பற்றி, அரசு துறந் திருந்த குடக்கோச்சேரல் இளங்கோவடிகள் ஒரு மாபெரும் காவியம் இயற்றிப் புரட்சி செய்துள் ளார். அரசர் யாத்த வணிக வரலாற்றில் வாணிகத்தின் முறைமையோ வாணிகத்தின் சிறப்போ யாண்டும் கூறப்பெற்றில. ஆனால், அதே நேரத்தில் வணிகர்தம் வாழ்வியல் கோட் பாடுகள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப் பெற் றுள்ளன. அக்கோட்பாடுகளை ஆய்ந்து நோக்கும் பொழுது, அவ்வணிக குலம் இன்றைய செட்டி நாட்டவரின் வாழ்க்கைக்கு முன்னோடியாக இருந் திருக்கலாம் என எண்ண இடந்தருகிறது. அந்த எண்ணங்களை வைத்து, 'வருந்தி பிறர்க்கார்த்து பெரும்புகழ் பெற்ற மாசாத்துவான்' என்பானின் குலம் காட்டும் செயல்முறைகளை இன்றைய செட்டிநாட்டவரின் வாழ்வியல் முறைகளோடு ஒப்பிட்டுக் காண்பதே இக்கட்டுரையினது நோக்கம்.

பூம்புகாரின் வணிகர்குல வாழ்வியல், சிலப் பதிகாரத்தின் திருமணச்சடங்கு, உணவு முறை, தனித்த வாழ்க்கை ஆகியவை மூலமாக வெளிப் படுத்தப்பெறுகிறது. திருமணச்சடங்கு முழுக்க முழுக்க இன்றைய செட்டிநாட்டவரின் திருமணத் தோடு ஒத்துள்ளது. செட்டிநாட்டுப் பெரு மக்கள் திருமணம் நிச்சயிக்கின்ற நாளைப் 'பேசி முடித்துக்கொள்வது' என வழக்கு நிலையில் குறிப்பிடுவர். இதனைச் சிலப்பதிகார ஆசிரியர்,

> "இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
> மணவணி காண மகிழ்ந்தனர்"
> [மங்கல வாழ்த்துப்பாடல் : 41, 42]

எனப் பேசுவார். அதன்பின், திருமணத்தை

> "யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
> மாநகர்க்கு ஈந்தார் மணம்"
> [மங்கல வாழ்த்துப் பாடல் : 43, 44]

எனக் குறிப்பிடுவார். இவ்விரண்டடி நிகழ்ச்சி களும் இன்று செட்டிநாட்டில் நடைபெறு கின்றன. ஆனால், ஒரே ஒரு வேறுபாடு—யானை பயன்படுத்தப்பெறவில்லை. அதற்குக் காரணம், இன்றைய வாழ்வியல் முறை. பொன்னமராவதி, புதுப்பட்டி போன்ற செட்டிநாட்டுப் பகுதிகளில் 'கழுத்திரு' அணிந்துகொண்டு திருமணத்தை ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று பெண்கள் அறிவித்து வரவேற்று வருகிறார்கள். காரைக்குடி, தேவக்கோட்டை போன்ற பகுதிகளில் 'கண்ட சரம்' போன்ற பெருநகை அணிந்துகொண்டு சென்று கூப்பிடுகின்ற வழக்கம் உண்டு. இதைத் தான் சிலப்பதிகார ஆசிரியர் 'அணியிழையார்' என்று குறிப்பிட்டார். அணியிழையார் என்பது பெண்களுக்குரிய அடைமொழியாக இருந்தாலும் அணிகலன்களைச் சிறப்பாக அணிந்த பெண் களையே குறிக்கும். எனவேதான், திருமணத்தைக் கூறிக் கூப்பிடுகின்ற பெண்கள் அணியணிந்து செல்கின்ற சிறப்பை ஆசிரியர் 'அணியிழையார்' என்ற அடைமொழி மூலம் வெளிப்படுத்துகிறார். 'மாநகர்க்கு ஈந்தார் மணம்' என்ற அடிகூடத் திருமணத்திற்கு முதல்நாள் இரு சிறுவர்களை அலங்கரித்து, வீடுதோறும் செல்ல வைத்து, 'கல்யாணம் சொன்ன அளவுக்கெல்லாம் சரி தானா?' என்று கேட்கின்ற செட்டிநாட்டு வழக் கத்தை நினைவுபடுத்துகிறது.

திருமணங்களில் சங்கு முழக்கொலி இன்று எக்குலத்தார் திருமண முறையிலும் இல்லை; ஆனால், செட்டிநாட்டில் மட்டுமே திருமணச் சடங்கின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் சங்கு ஊதப்படுகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், வேறு எந்த மங்கல ஒலியும் ஒலிக்கப் படாமல் சங்கை மட்டுமே ஊதித் திருமணச் சடங்குகளை நிகழ்த்துவார்கள். எனவே, செட்டி நாட்டார் திருமணத்தில் சங்கிற்கு முக்கியத்துவம் உண்டு. இதையே ஆசிரியர்,

"முரசெழுந்தன முருடதிர்ந்தன பணிலம் வெண்குடை

அரசெழுந்ததோர் படியெழுந்தன"

என்ற அடிகளில் குறிப்பிட்டுச் சங்கு முழக்கு வதைச் சிறப்பாகக் கூறுகிறார். அடுத்து 'அகலுள் மங்கல அணி எழுந்தது' என்று ஆசிரியர் குறிப் பிடுவது மிகச் சிறப்புடைத்தாகும். இதன் பொருள், ஊருக்குள் மங்கல அணி எடுத்து வரப் பெற்றது என்பதாம். [மங்கல அணி என்பது தாலியைக் குறிப்பதாம்] இவ்வாறு மங்கல அணி ஊரில் பவனி வருவது வேறெந்தக் குலத்தார் திருமணத்திலுமில்லை. நகரத்தார் மரபில்தான் 'திருப்பூட்டுகிற தட்டு' என்ற ஓர் அமைப்பில் கழுத்திர் தாலி, திருமணப் பட்டுச்சேலை, மாலை— இவற்றை வைத்து மாப்பிள்ளை அழைப்போடு ஏந்தி வருகின்ற வழக்கம் உண்டு. மணமக்களை வாழ்த்துகிற பொழுது,

'சின்மலர் கொடுதூவி'

[மங்கல வாழ்த்து-62]

என்ற வாழ்த்தியல் முறையை, 'பூமணம் இடுதல்' என்று குறிப்பிடுகின்றனர். மற்ற குலத்தார் 'மஞ்சள் அரிசி'யை வாழ்த்தியல் பொருளாகப் பயன்படுத்துவதை இவ்விடத்தே நினைவு கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு சிலம்பில் கூறப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் செட்டி நாட்டாரின் மரபோடு ஒத்துவிளங்குவது உள்ளங் கை நெல்லிக்கனியெனத் தெளிவாகிறது.

திருமணம் ஏற்ற மணமக்களை ஒரு குறிப் பிட்ட காலத்திற்குப் பிறகு தனிக்குடித்தனம் அமைத்திட மணமக்கள் இருவரையும் பெற் றெடுத்த பெற்றோர்கள் அன்புடன் கருத்தொரு மித்து செயல்படுவர். இதைச் செட்டிநாட்டார் 'வேறு வைத்தல்' எனக் குறிப்பிடுவர். இதையே சிலப்பதிகார ஆசிரியரும்,

"வாரொலிக் கூந்தலைப் பேரியற் கிழத்தி

....

வேறுபடு திருவின் வீறுபெறக் காண

உரிமைச் சுற்றமொடு ஒருதனிப் புணர்க்க"

(மனை....84—88)

என்று குறிப்பிடுவார். இங்கு 'பேரியற்கிழத்தி' என்பதற்கு 'இருநிதிக் கிழவன் மனைவி' எனப் பொருளெழுதி கோவலனின் தாயை அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவார். செட்டிநாட்டார் மரபி லும் மணமகனுடைய தாயே அந்தச் சடங்கில் முக்கியமாகக் கருதப்படுவதை இக்கருத்தோடு ஒப்பிடலாம்.

வணிகர் பெருமக்கள் பயன்படுத்திய பொரு ளாக ஆசிரியர் குறிப்பிடுவது ஒரே ஒரு பொருள் தான். அப்பொருள் :

"தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்
கைவன் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசில்"

[கொலைக்களக் காதை : 35—37]

என்று பனை ஓலையால் முடையப்பெற்ற தடுக்கைக் குறிப்பிடுகின்றார். இந்தப் பனை யோலையால் முடையப்பெற்ற பொருள்களை அதிகம் பயன்படுத்துபவர் செட்டிநாட்டாரே ஆவர். ஆசிரியர் அப்பொருள்களைக் குறிக்க இரண்டரை அடிகளைச் செலவழிக்கிறார். இதில் 'மகடூஉக் கவின் பெற' என்ற தொடர் பெண் களால் முடையப்பெற்றது என்பதைக் குறிக்கும். செட்டிநாட்டு ஆச்சிமார்கள் அத்தொழிலில் சிறப் புற்று விளங்குவதை இங்கு ஒப்பு நோக்குதல் வேண்டும். எனவேதான், ஆசிரியர் 'கைவல் மகடூஉ' என்று அடைமொழியும் கொடுக்கின்றார். இவ்வாறு வணிகர்க்குரிய ஒரு பொருளை மட்டும் சுட்டிய ஆசிரியர் அவ்வொரு பொருளையும் செட்டி நாட்டுக்கே உரியதாகச் சுட்டுவது மிகப்பொருத்த முடையதாகும்.

சிலம்பின் வணிகர் குலம் செட்டிநாட்டு மரபுக்கு முன்னோடி என்பது மேற்கூறப்பெற்ற சில சான்றுகளால் நிறுவப்பெற்றுள்ளது. இந்த அடிப்படையில் சிலம்பை ஆய்ப் புகுந்தால் பல அரிய செய்திகள் கிடைக்கப்பெறும். அவற்றை மட்டுமே எண்ணிப் புகழடையாமல்—நம்மவர்— குலத்துக்குரிய நூலாகிய சிலப்பதிகாரத்தைச் சிறப்புப்படுத்தும் வண்ணம் கம்பர் விழாவைப் போலச் செட்டிநாட்டின் ஒவ்வோர் ஊரிலும் நகரத்தார் பெருமக்கள் சிலப்பதிகார விழா எடுக்க வேண்டும். அத்தகைய பணியில் இன்றைய இளைஞர் சமுதாயம் ஈடுபடுமாக !

வீரவன நாயகி

(டாக்டர் அர. சிங்கார வடிவேலன்)

வீரவன நாயகியே வினைநீக்கும் மாமருந்தே!
ஈரமனச் சோலையிலே எழுந்தருளும் மாமயிலே!
தாரணியும் தெய்வதமே! சாக்கோட்டைப் பெருவாழ்வே!
நாரணிய மெய்யடியார் நலமணக்கச் செய்வாயே!

உமையவளே! அன்பர் நெஞ்சம்
உடையவளே! பக்திக் கண்ணின்
இமையவளே! சிவனுர் போற்றும்
இனியவளே! இரண்டு தோளும்
அமையவளே! பற்ருர்க் கென்றும்
அரியவளே! பரிந்து காப்பாள்
நமையவளே! என்று நாளும்
நாவார வாழ்த்தாய் நெஞ்சே!

யாரால் இயலும்?

புலவர் அழ. அண்ணாமலை

ஏட்டில் உள்ள கதைகளையே
எடுத்துப் பேசும் மானிடரே! - இந்த
நாட்டில் நடக்கும் காட்சியெலாம்
நாடகம் என்பதை அறியீரோ?
நாடகம் என்பதை அறியாமல்
நல்லதுங் கெட்டதும் புரியாமல் - இந்தக்
கூடாய்ப் போகும் உடலழகைக்
கொண்டு மகிழ்ச்சி கொள்வீரோ?
காலையில் மலர்ந்து மணம்வீசும்
காதல் சொல்லும் பூக்களெல்லாம் - அந்தி
மாலை வந்தால் வாடுவதை
மனத்தால் சற்றே அறியீரோ?
கோட்டை கொத்தளம் தாமிருந்தும்
குனிந்து வணங்க ஆளிருந்தும் - இறைவன்
ஏட்டை எழுத்தை மாற்றுதற்கே
யாரால் இயலும் எடுத்துரைப்பீர்?
இத்தரை என்னும் அரங்கினிலே
இறைவன் ஆடும் நாடகந்தான் - இன்னும்
எத்தனை நாட்கள் நடைபெறுமோ?
எங்கே எப்படி முடிவுறுமோ?

எங்கள் உய்யவந்தாள் !

('அப்பன் பழநி அப்பனடா...' என்னும் பண்.)

ஆத்தாள் எங்கள் உய்யவந்தாள் — அவள்
அன்பாய் நன்மை செய்யவந்தாள்
காத்துப் போற்ற வேடுெப்பாள்—அவள்
கல்வி நல்க நூலெடுப்பாள்! (ஆத்தாள்)

பூத்துக் குலுங்கும் பூமாயி—அவள்
புவனம் போற்றும் ராமாயி !
கூத்தும் பாட்டும் விரும்பிடுவாள்—அவள்
கூவி அழைத்தால் வந்திடுவாள் ! (ஆத்தாள்)

மலையத் துவசன் பெற்றவளாம்—அவள்
மண்ணுளும் வித்தை கற்றவளாம் !
கலையை நிலையை உயர்த்திடுவாள்—அவள்
கவலை எல்லாம் தளர்த்திடுவாள் ! (ஆத்தாள்)

நல்ல புதுவயல் மக்களுக்கே—அவள்
நாளும் தீர்ப்பாள் சிக்கலினை !
கல்விக் கரசி கலைவாணி—அவள்
கடைக்கண் பார்வை அருள்மாரி! (ஆத்தாள்)

உய்யவந்தாள் இல்லா ஊருமில்லை—நம்ம
உமையவள் இல்லா வீடுமில்லை !
வையக வாழ்வை உயர்த்திடுவாள்—அவள்
வறுமை நோயை அகற்றிடுவாள் ! (ஆத்தாள்)

நாட்டை நகரைக் காக்கவந்தாள்—அவள்
நன்மைகள் எல்லாம் ஆக்கவந்தாள் !
கேட்டைத் தீர்க்க திரிசூலம்—நாம்
கேவி அழுதால் கருணைமுகம் ! (ஆத்தாள்)

பயிரைக் காக்க மழையாவாள்—நம்
பண்பை வளர்க்கத் துணையாவாள் !
உயிரைக் காக்கும் மகேஸ்வரி—அவள்
உலகைக் காக்கும் தயாபரி ! (ஆத்தாள்)

(புலவர் இராம. வீரப்பன், புதுவயல்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலவன்

பை. ரமணி, சாக்கோட்டை

இப்பரந்த உலகினில் அளவிடற்கரிய உயிர்கள் யாவும் அதனதன் கன்ம வினைக்கேற்ப அண்டசம் (முட்டை), சுவேசம் (வேர்வை) உற்பீசம் (வித்து) சராயுசம் (கருப்பை) ஆகிய நால்வகைப் பிறப்பினில் எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிபேதங்களுட்படுகின்றன. இத்தகைய பலப்பல யோனியினுள்ளும் பிறத்தற்கரிய மானிடப்பிறப்பெய்துவதரிது. அவ்விதம் பிறப்பினும் காடு, மலை முதலிய இடங்களல்லாமல் நற்றேசத்தில் நற்குடிகள் வாழும் இடத்தில் பிறத்தலரிது. அவ்வாறு பிறப்பெய்தினும், இத்பிறப்பெய்ததனுல் (மானுடப்பிறவி) யாது பயன் எனத் தெளிந்துணர்வதரிதாகும். ஆயினும், உயிர்கள் யாவும் பிறவிப் பயனடைய வேண்டுமென்பதற்காகவே இறைவன் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்தொழில்களைப் புரிகின்றனன்.

அப்பர் சுவாமிகளும் இறைவனைக் கண்ணுரக் கண்டு களிக்க,

''குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயிற் குமின்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மானில த்தே.''

என அழகாக மானிடப் பிறவியின் பெருமையினை எடுத்துக் காட்டுகின்ருர். உடம்பிற்கு எவ்வாறு உணவுப்பண்டம் வளர்ச்சியைத் தரவல்லதோ, அதே போன்று உள்ளமாகிய உயிருக்கு இறையுணர்வாகிய ஆகாரம் பயன்தரவல்லது. இறையருள் பெற்ற ஆன்மாவாகிய உயிர்க்கு இறைவன் மரணமாகிய பயத்தை ஒழித்து, இனிப் பிறவாத் தன்மையாகிய சிவசாயுச்சியத்தை அளிக்கின்றனன்.

அவ்விறைவனுகிய சிவபெருமான்தான் யம பயத்தினையும் மரண வேதனையையும் நீக்கியருள யமனுடைய திசையாகிய தென்திசை நோக்கி யம நிக்ரகம் செய்ய இடக்கால் தூக்கித் திருநடம் புரிகின்றனன். குமரகுருபர சுவாமிகள் தமது சிதம்பரக் கோவையுள்,

''பிடிப்பதுமக் கெனைவேண்டின்
வெங்கூற்றெனும் பேர்முடிய
முடிப்பது மத்த முடியார்க்கு
வேண்டு முக்கட் பரனர்
அடிப்பதுமத் தொன்றெடுத்துத்
தென்பான் முக மாகநின்று
நடிப்பதுமத் தன்மையா
நமனுரிது நாடுமினே.''

என்று கூறுவதிலிருந்து, ''சிவனடியானுகிய என்னை உன் (யமன்) பாசக்கயிற்ருல் பிடித்தால் உம்மை (யமனை)ச் சிவபெருமான் தம் இடக்காலால் அழித்துவிடுவது திண்ணம்'' (முன்பு மார்க்கண்டேயனுக்காக யமனைச் சங்கரித்தபடி) என்ற படிக்கு ஆன்மாக்களாகிய நம்மை எல்லாம் மரண, யம வேதனையினின்றும் தடுத்தாட் கொள்ளும் குறிப்பாக ஆடல்வல்லான் அனுக்கிரகிக்கின்றனன் என்பது தெளிவாகிறது.

ஆகவே, பெறுதற்கரிய பிறவியாகிய மானுடப்பிறவி அடைந்த நாம் அனைவரும், எல்லாம் வல்ல இறைவனுகிய சிவபெருமான் அருள் பெற்றுய்யச் சாக்கை ஸ்ரீ உமையாம்பிகை உடனுய வீரசேகரசுவாமி கொண்டருளும் குடமுழுக்குப் பெருவிழாவில் கலந்து, பிறவிப் பயனுகிய பேரின்பப் பெருவாழ்வு பெறத் திருச்சிற்றம்பலவனின் திருவடியைச் சிந்தித்து அருள் பெற்றுய்வோமாக.

வாழ்க சைவம்,

வளர்க சைவ சித்தாந்தம்!

சாக்கோட்டைக் கோயில் கல்வெட்டுகள்பற்றி இந்திய அரசின் கல்வெட்டுத்துறையின் ஆய்வுக்குறிப்பு முன்னுரை

Government Epigraphist for India Otacamand, South India.

INTRODUCTION

Sakkottai is a village in the Thiruppathur Taluk of the Ramnad District and is situated about 16 miles due east of Thiruppathur.

The village contains several temples of which the biggest and the most important is the temple of Siva who is worshipped under the name of Virasekarisvaramudaya Nayanar. The inscriptions edited below are engraved on the walls of the Mahamandapa, Arthamandapa and the central shrine of the Siva Temple. Except certain portions of the central shrine and the Arthamandapa, the rest of the temple seems to have undergone renovation in the course of which many inscribed stones have been removed from their proper places and built again into the walls at different places with the result that a few of the inscriptions have become disjointed and rendered incomplete.

From the descriptions which are fully preserved we learn that Sakkalur was the name by which Sakkottai was known in the past and the village is described as situated in the territorial division of Perambur Nadu which was a sub division of Keralasinga Vala Nadu—they refer to the god of the temple as Virasekariswaramudaya Nayanar, a name which persists even to this day. The records however do not give any information about the origin of the temple, its date or its founder. The majority of the inscriptions belong to the Pandiya Kings of the 13th Century A. D. and later. Of the rest one (No. 34) is dated in the reign of the Vijaya Nagara ruler, Malligarjuna in the Saka Year 1376 (A. D. 1454). Among the Pandiya kings mentioned in the inscriptions, the earliest that we can identify is Maravarman Sundara Pandiya I (A. D. 1216-1239) who bears the welknown title of "Sonadu Valangi Arulia" (Ins. No. 16). Since the record of this king mentioned god Virasekaramudayar we may believe that the temple and the deity existed before the advent of this ruler. If one should suppose that the deity was named after a king or chief of that name who installed it we have some reason to ascribe the installation of the deity if not the foundation of the temple to the chief Virasekaran alias Adalaiyur Nadalvan who figures in a record of the 49th year of the reign (=1119 A.D.) ol the Chola king Tribhuvana Chakravarti Kulothunga I at Kunnakkudi not far from Sakkottai in the same Thiruppathur Taluk (A. R. E. No. 32 of 1909. Report Part II Para 23).

The accompanying list gives the names of the kings who figure in the inscriptions at Sakkottai. Among the chiefs of lesser importance who find mention in the records, the following are not worthy (1) Thirukkalippalaiyudayan alias Kulothunga Chola adalalyur Nadalvan (Ins. No. 4). (2) Damman Kamban alias Dharmarayan who bore the title Tappilavachakan (Ins. No. 5) and (3) Udaiyan periyarayan alias gangeyan (Ins. No. 9 and 12).

தமிழ் மொழிபெயர்ப்பு

சாக்கோட்டை என்பது இராமநாதபுர மாவட்டத்தில் திருப்பத்தூர்த் தாலுகாவில் உள்ள ஒரு கிராமம். அது திருப்பத்தூரில் இருந்து கிழக்கே 16 மைல் தொலைவில் உள்ளது.

அந்தக் கிராமத்தில் பல கோயில்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகப்பெரியதும் முக்கியமானதுமான சிவன் கோவிலில் உள்ள மூர்த்திக்கு "வீரசேகரீஸ்வரமுடைய நாயனர்" என்பது பெயராகும். கீழே குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் சிவன் கோவிலில் உள்ள மகா மண்டபம், அர்த்தமண்டபம், மையமண்டபம் ஆகியவற்றின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன. கோவிலின் மைய மண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவற்றின் சில பகுதிகள் தவிர, மற்ற பகுதிகள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அப்படிப் புதுப்பிக்கப்பட்ட காலத்தில் பல கல்வெட்டுகள் தமக்கு உரிய இடத்தில் இருந்து அகற்றப்பட்டு வேறு வேறு இடங்களில் பிறகு பொருத்தப்பட்டுள்ளன. அதன் விளைவாகச் சில கல்வெட்டுகள் பொருத்தமற்ற இணைப்பாகவும், பூர்த்தியற்ற அமைப்பாகவும் விளங்குகின்றன.

முழுதுமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் இருந்து நாம் அறிவதாவது: கடந்த காலத்தில் சாக்கோட்டை என்பது சாக்களூர் என்று வழங்கப்பட்டு வந்தது. அக்கிராமமானது கேரளசிங்க வளநாட்டைச் சேர்ந்த பெரம்பூர்நாடு எனும் கோட்டத்தில் இருந்ததாக வர்ணிக்கப்படுகிறது. இக்கோயிலின் கடவுளுக்கு வீரசேகரீஸ்வரமுடைய நாயனர் என்ற பெயர் வழங்கிவந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அப்பெயர்தான் இன்றும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனல் கல்வெட்டுக்கள் இக்கோயிலின் மூலத்தோற்றம் பற்றியோ, அதன் காலம் பற்றியோ, அதனை உருவாக்கியவரைப்பற்றியோ யாதொன்றும் குறிப்பிடவில்லை. கல்வெட்டுகளில் மிகப் பெரும்பாலானவை கி. பி. 13-ஆம் நூற்றாண்டையும், அதன் பிற்காலத்தையும் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் காலத்தைச் சேர்ந்தவை. மற்ற கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டானது (34-ஆம் எண்) மல்லிகார்ஜுன மன்னன் காலத்தைச் சேர்ந்தது. அவன் விஜய நகர ராஜ்யத்தை சக ஆண்டு 1376-இல் (கி. பி. 1454) ஆண்டவன். கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள பாண்டிய மன்னர்களுள் தொன்மையானவனாக நம்மால் அடையாளம் கண்டுகொள்ளப்படக்கூடியவன் **முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** ஆவான். அவனது காலம் கி. பி. 1216 — 1239 ஆகும். அவனுக்குச் "சோணாடு வழங்கி அருளிய" என்னும் புகழ்மிகு பட்டம் உண்டு. (கல்வெட்டு எண் : 16). இந்த மன்னனின் கல்வெட்டானது வீரசேகரமுடையார் என்னும் கடவுட்பெயரைக் குறிப்பிடுவதால், இம்மன்னனுக்கு முன்பே இக்கோயிலும் இக்கடவுளும் இருந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை. இக்கோயிலின் கடவுளுக்கு உரிய பெயரானது இக்கோயிலை உருவாக்கிய மன்னனின் பெயரையோ தலைவனின் பெயரையோ கொண்டதாக இருக்கலாம் என்று யாராவது நினைத்தால் நாம் இக்கோயிலின் கடவுளின் பெயரை வீரசேகரன் என்ற தலைவனேடு, அதாவது அதலையூர் நாடாழ்வான் என்பவனேடு ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாய் இருக்கும். இக்கோயிலின் அடித்தளத்தை இவன் அமைக்காவிட்டாலும் இக்கடவுளின் ஸ்தாபிதம் இவனேடு தொடர்புடையதாகலாம். சோழமன்னன் ஆகிய திரிபுவன சக்கரவர்த்தி முதலாம் குலோத்துங்கன் என்பவனின் ஆட்சிக் கால 49-ஆம் ஆண்டுக் கல்வெட்டில்(கி.பி. 1119) வீரசேகரன் என்ற அதலையூர் நாடாழ்வானைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இவன் திருப்பத்தூர் தாலுகாவில் உள்ள குன்னக்குடியில் இருந்தவன் ஆவான். இக்குன்னக்குடி சாக்கோட்டையின் அருகில் இருக்கிறது. (A. R. E. எண் 32; ஆண்டு 1909. ரிப்போர்ட் பாகம் II, பாரா 23.)

இத்துடன் உள்ள பட்டியலில் சாக்கோட்டைக் கல்வெட்டுகளில் காணப்படும் மன்னர்களின் பெயர்கள் உள்ளன. கல்வெட்டுகளில் காணப்படும் முக்கியத்துவம் அற்ற தலைவர்களில் கீழ்க்கண்ட பெயர்கள் அவ்வளவு முக்கியமற்றவை ஆகும்: (1) திருக்கழிப்பாலை உடையான் என்ற குலோத்துங்க சோழ அதலையூர் நாடாழ்வான். (கல்வெட்டு எண் 4)
(2) தம்மன் கம்பன் என்ற தர்மராயன் இவனுக்குத் "தப்பிலா வாசகன்" என்ற பட்டம் உண்டு. (கல்வெட்டு எண் 5)
(3) உடையன் பெரியராயன் என்ற காங்கேயன். (கல்வெட்டு எண் 9, 12)

சாக்கோட்டைக் கல்வெட்டிலிருந்து கீழ்க்கண்ட அரசர்கள் காலம் தெரிகிறது.

பாண்டியர்கள்

1. குலசேகரன் கி.பி. 1237 (எண் 15).
2. குலசேகரன் (எண் 2, 3, 4, 6, 7)
3. குலசேகர மாறவர்மன் (அறிய முடியாதவன்) (எண் 8, 12)
4. குலசேகர மாறவர்மன் (கி. பி. 1268-1312) (எண் 10, 19, 29,30)
5. ஸ்ரீவலவ தேவ மாறவர்மன் (அறிய முடியாதவன்) (எண் 11, 20)
6. சுந்தரபாண்டியன் (ஷ) எண் 9, 23)
7. சுந்தரபாண்டிய ஜடாவர்மன் (ஷ) (எண் 25)
8. சுந்தரபாண்டிய மாறவர்மன் (கி. பி. 1216—39) (எண் 16)
9. சுந்தரபாண்டியன் மாறவர்மன் (அறிய முடியாதவன்) (எண் 17 & 21)
10. வீரபாண்டியன் (ஷ) (எண் 1)
11. வீரபாண்டிய மாறவர்மன் (எண் 5)

விஜயநகர அரசர்கள்

12. மல்லிகார்ஜுனு (எண் 33)
13. பிற தலைவர்கள் (எண் 13, 14, 18, 22, 24, 26, 27, 28, 31, 32, 34.)

———

பார்த்திப ஞு தை மீ 9உ (1887) நடந்த

கும்பாபிஷேகப் பாடல்

அன்பான சாலிவா கனமாஞ் சகாப்தமது வாயிரத் தெணூற்றெட்டினில்
அமைவான பார்த்திபநல் வருடமுந் தைமாச மானநவ தேதியதனில்
அழகான பௌரணை மீனலக் னம்பூச மானதொரு புதன்வாரமும்
ஆகின்ற ராசத வேளையாஞ் சுபதினத் தன்புடைய பாண்டிநாட்டிற்
றுன்பான குஷ்டநோய் சோழற் ககற்றியருள் சுயமான பிரமதீர்த்தஞ்
சூழ்கின்ற வீரைவள மானவழ காபுரித் தூயவொரு நாமமுற்றுச்
சுகமான சாக்கையிற் றேவைங் கரிற்சிறந் தொளிர்கின்ற வீரப்பனற்
சுதன்ராம லெட்சுமண செட்டியவ ளுற்பெற்ற தூயபுத் திரர்களாலே
தென்பா யமைத்தநற் கல்லா லியற்றுந் திருப்பணிக் கோயிலுற்ற
தேவியுமை யம்பிகை தன்னேடு மானந்த சின்மய சுயம்புவான
திகழ்வீர சேகர ரானபர மேஸ்வரன் சேர்ந்ததே வதைகளுக்குஞ்
சீவகா ருண்யமுத ளுன்குமே குடிகொண்ட செயமுடைய செல்வருக்கு
நண்பான முப்பத் திரண்டறம் நாளும் நடத்துசீர் வணிக ரெல்லா
நலமான வஷ்டபந் தனமுதற் கும்பாபி டேகமு நடாத்தி நின்ற
நன்மையைக் கூறுதற் காதிசே டனுந்தன் னுவா யிரத்தினுலே
நாளா யிரங்கள்சென் ருலுமுடி யாதென்னி ளுன்கூற வெளியதாமோ

கண்டனூர் நா. பெ. நா. மு. முத்துராமையா அவர்களால் 1913-ம் வருஷம் கும்பாபிஷேகக் கவித்திரட்டில் இயற்றப்பெற்றது.

சாக்கோட்டைக் கல்வெட்டுகள்

திரட்டி உதவியவர் மு வினைதீர்த்தான் செட்டியார், புதுவயல்)

சாக்கோட்டை அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை கோயில் மிகப் பழைமை யானது. இங்கு கி. பி. 12, 13 -ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் 34 உள்ளன. இவை அரசாங்கத்தால் 1945 - 46 - 47 -ஆம் ஆண்டுகளில் படி எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் வருமாறு :

கல்வெட்டு எண் 1. *(A. R. No. 98 of 1945 - 46)*

(மகா மண்டபத்தில் தென்புறச் சுவரில் வலப்புறம் சுவாமி கோவிலுக்கு நுழையும் இடத்தில்)

கருத்து : இந்தக் கல்வெட்டு பாண்டிய அரசனுகிய வீரபாண்டிய தேவரின் அரசாட்சியில் 36-ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 25-ஆம் தேதியில் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் ஸ்ரீ வீரசேகரீசுரமுடையார் கோவிலில் ''பெரிய முதலியார் சந்தி'' என்னும், ஒரு விசேடத் திருவாராதனைப் பூசை நடத்துவதற்காகச் செய்த ஏற்பாடுகளை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இப்பூசைக்கும், மற்ற இரண்டு நந்தாவிளக்கு எரிவிப்பதற்கும் வேண்டிய செலவிற்காகப் பொழிகால் நாட்டின் விருப நாராயண நல்லூர் என்னும் கிராமத்தைத் தானம் செய்ததாக எழுதப்பட்டுள்ளது. தானம் செய்யப்பட்ட கிராமம் அரசனின் காணியாக, அதாவது சுய போகமாக இருந்ததாகவும், இதனில் சில நிலங்கள் பழந்தேவதானமாக இருந்தபடியால் அவைகளை நீக்கி நின்றவை சக்கரவர்த்தி மூவேந்தவேளான் பக்கல் கொடுத்தார். அவன் அவற்றை உழுது விளைந்த பலவகைத் தானியங்களில் ஒரு பாகம் கடமையாகக் குறிப்பிட்ட அட்டவணைப்படி கோவிலிற்கு இறுப்பதாக அரசன் கட்டளை இட்டார் அரசன் சார்பில் சூரிய தேவனும் மண்டல புருஷனும் கையெழுத்திட்டனர்.

ஸ ஸி ஸ்ரீ

மூலம் : வ த (॥ ✽) திருமுகத்துக்கு ஆவுடைய நாயினார் மாளுவச் சக்த்தி ஒலே (=✽) ஸ்ரீ வீரபாண்டிய தெவற்கு யாண்டு ௩௰கூவது காத்திகைமீ உ௰டுஉ சாய்க்களுர் உடையார் விரசெகரிசுரமுடைய நாயனுற்கு நாம் கட்டின பெரிய முதலியார் சந்திக்கு திரு அமுதுபடி உள்ளிட்ட விஞ்சந்துக்கும், திரு நன்தா விளக்கு இரண்டுக்கும் நாம் குடுத்த ஊராவது பொழிகால் நாட்டில் நம் காணியான விருபநாராயண நல்லூர் நான்கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் நத்தம் நான்கெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலில் முன்பு தெவதானம் திருவிடையாட்டம் தன்மதானம் உள்ள நிலம் நிங்கலாக உள்ள நிலமடங் களுக்கும் சீவிதப்படி ஒருமாநிலத்துக்கு வெள்ளக்கெடு வறடக்கெடு பாத்து பயிர்நின்ற நிலத்துக்கு பசாநத்துக்கு மாத்தால் நாற்கல நெல்லும் குறுவைக்கு இருகல நெல்லும் வரகு தினை விளைந்த நிலத்துக்கு மாத்தால் கலமும் எள்ளு விளைந்த நிலத்துக்கு மாத்தால் இருதூணி என்னும் புன்செய் கைவிதை. காட்டு நெல்லு விளைந்த நிலத்துக்கு மாத்தால் இருகல நெல்லும், பருத்தி விளைந்த நிலத்துக்கு நாடற்ற மருசாதிக் கடமை இறுப்ப தாகவும். இப்படி இவ்வூர் சக்கிரவத்தி மூவெந்திரவெளான் உழுது கடமை இறுத்துப் பொதுவானுகவும். இப்படி சந்திராதித்தவர் சொல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும். விலக்கிலி. இப்படிக்கு சூரியதெவன் எழுத்து. இப்படிக்கு மண்டல புருஷன் எழுத்து.

கல்வெட்டு எண் 2. *(A. R. No 99 of 1945 - 46)* (மேற்படி சுவரில்)

கருத்து : இது பாண்டிய மன்னன் குலசேகர தேவருடைய ஏழாம் அரசாண்டில் போடப்பட்டது. கரி உய்யவந்தான் கண்டன் காங்கேயன் செய்த பூதானத்தைக் கூறுகிறது. இவர் ஸ்ரீ வீரசேகரீசுரமுடையாற்குத் திருமடைப்பள்ளிப் புறமாக இரண்டு மாக்காணி அரைக்காணி நிலத்தைக் கொடுத்தார். இந்நிலத்திற்கு இறை செலுத்துமிடத்தில் பெரு வரி சிறு வரிகளில் ஐந்தில் ஒரு பாகமாகக் குறைத்துவிட்டமைக்கு அரசனுக்காக ஸ்ரீ சுந்தர பாண்டிய மூவேந்தவேளான் கையெழுத்திட்டார்.

ஸ ஸ்தி ஸ்ரீ

மூலம் : வ த [‖ ×] கரி உய்யவந்தான் கண்டன் நானகாங்கயனென் [| ×] ஸ்ரீ குலசேகர தெவற்க்குயாண்டு ஏ. வது விரசெகரி பவரமுடைய 8 ஹா தெவற்க்கு. நமக்குப் பிழைத்தச் செய்த உடையான். தெவன்னுன செனுவரயன். விசலூர்க் காணியில் நான். நங்கத்தான். வயக்கலில். நிர்வரத்த நிலம். ஒரு மாவும். விலைக்கு விற்ற நிலம் மாகாணி. அரைக்காணியும் ஆக நிலம் இரண்டு மாக்காணி. அரைக்காணிக்கும். கீழ்பாற்க் செல்லைப் பொற்பதி. சொறன். செறன். வெலஞ்செக்கும். கற்பகன். வானவன் வெலஞ் செக்கும் மெற்க்கும். தெற்க்கு. எல்லை கிழக்கு. பொன. வாக்காலுக்கு கிழக்கும் வடக் கெல்லைப் பொற்பதிசொறன். திரிவயக்கலுக்கும். வாள் வந்திரி. வயக்கலுக்குத் தெற்க்கும் மெற்படகிறைகள். வழங்கியும் திருமடைப்பள்ளிப்புறமாக விற்றுக் குடுத்தமைக்கு சுந்தரபாண்டிய மூவெந்த வெளான் எழுத்து. பலர். ஸ்ரீரா மெற்ப்படியான். பற்ருன் விரசெகரன் திருமடைப்பள்ளிப் புறம். சிற்றுவரி·பெருவரியும் ஆக தந்த ஐம்பா இறையிலி யாக விற்றுக் கல்வெட்டிக் குடுத்தென் உய்யவந்தான் கண்டனுனகாங்கயனென் இப்படிக்கு இவை சுந்தரபாண்டிய முவெந்தவெளாண் எழுத்து. உ

கல்வெட்டு எண் - 3 *(A. R. No 100 of 1945 × 46)* ஷெ சுவரில்

இது பாண்டிய குலசேகர தேவருடைய 4-ம் அரசாண்டில் கல்வாயில் நாடாழ்வான் செய்த தர்மத்தை விளக்குகிறது. இவர் கல்வாயில் நாயனுர் கோவிலின் ஸ்தானத்தார். வீரசேகரிசுரமுடைய.

நாயனுர் ஸ்தானத்தார்களிடத்திலிருந்து கற்பூர விலைக்கு. கிரயமாகப் பெற்றுக் கொண்ட நிலத்தை. கல்வாயில், நாயனுர்க்கும். வீரசேகர முடைய நாயனுர்க்கும். வாலை தேச நாயகப் பிள்ளையார்க்கும் தானம் செய்துக் கொடுத்தார். தானம் கொடுத்த. நிலத்திற்குண்டான வரிகளில்: ஐந்தில் ஒரு பாகமாகக் குறைத்து இறையிலிகாராண். கிழமையாக விட்டார்.

ஸ ஸ்தி ஸ்ரீ (‖)

மூலம் : வ த கலவாயில் நாடாழ்வான் ஓலை [‖ ×] கல.

வயல் நாயகர் கொயிலில் தானத்தாற்க்கும் விரசெகரிபவரமுடைய. நாயனுர். கொயில்த் தானத்தாற்க்கும் கண்டு சாயக்களுர் பற்று நமங்காணிப் பற்றில் மலையாளனங்குடிக்கா வெளையிற்ச் சுற்றுக்கு. தங்கள். பக்கல். கற்ப்பூரவிலைக். கொண்டு. கலவயில் நாயினுற்க்கு. ஐஞ்சில்லொன்றும் விரசெகரமுடைய நாயனுற்க்கு ஐஞ்சில்லொன்றும் சாயக்களுர்த் தெற்க்கில் வாலைதெச நாயகப்பிள்ளையாற்க்கு. ஐஞ்சில் லொன்னும் ஆக. இவ்வகைப் படியில். இறையிலி. காராங்கிழமை. யா.க குலசெகரதெவற்க்கு யாண்டு நாலாவது. முதல் தர்தமைக்கு இப்படி. சந்திராதித்த. வற்ச் செல்லக் கடவதாக. கல்லிலு(ம்) ஞ்செம்பிலும் வெட்டிக் கொண்டு. அனுபவித்த இவை. தெசி. நாராயண முவெந்தவெளான் எழுத்து. உ.

கல்வெட்டு எண் - 4 *(A.R. No. 101 of 1945 - 46)* ஷை சுவரில்

பாண்டிய வேந்தனுகிய, குலசேகர தேவருடைய ஆட்சி, *(13 × 1)* ஆம் ஆண்டில். திருக்கழிப்பாலையூர் அதிபதியாகிய குலோத்துங்கசோழ, அதலையூர் நாடாழ்வான். ஸ்ரீ விர சேகரீசுரமுடைய மஹாதேவர்க்கு திருப்பள்ளி எழுச்சி பூசை ஆராதனைகளின் செலவிற்காக பெரும்பூவில் ஐந்து மாநிலம். இறையிலியாக தானம் செய்ததாக இக் கல்வெட்டுக் கூறுகிறது.

ஸ ஸி ஸ்ரீ

மூலம் : வ த *[॥ ×]* திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குல செகரதெவற்க்கு யாண்டு. பதின்மூன்ருவதின். எதிராமாண்டு கண்டன். திருக்ரகழிப்பால. உடையான்னுன குலொத்துங்கசொழ அதலையூர் நாடாழ்வானனென். பெரும்பூனட்டுச் சாய்க்களுர். விரசெகர முடைய மஹாதெவற்க்கு நாம் திருப்பள்ளி. எழுச்சிக்கு திருவமுதுபடி உள்ளிட்ட வெஞ் சனங்களுக்கு இறையிலி. தெவதானமாக நிர்வாத்த பெரும்பூவிலில் மிகுட்டி உள்ளிட்ட நிலம். ஐஞ்சுமா. இது சந்திராதித்தவற் செல்லக்கல். வெட்டிக் குடுத்தொம். குலொத் துங்க சொழ. அதலையூர் நாடாழ்வான்னென் இப்படிக்கு, இது ெ(ந)ன் மலி(யு)டையான் எழுத்து. பல்மாஹெ. (பவ) ர (ர)ெ. (ஷ)

கல்வெட்டு எண் - 5 *(A.R. No 102 of 1945 × 46)* ஷை சுவரில்.

இது மாறவர்மரான. வீரபாண்டிய தேவருடைய 14-ம் அரசாண்டில். சேந்தமங்கலத்து. அரசு. தன்மன் கம்பனுன. தன்மராயன். என்பவர் ஸ்ரீ விரசேகரமுடையார்க்குச் செய்துக் கொடுத்த. பூதானத்தைக் கூறுகிறது.

கோவிலில் தனது. சிறந்த பெயராகிய. தப்பிலாவாசகன் என்கிற பெயரால் வழங்கச் செய்த தப்பிலாவாசக சந்தி என்கிற ஓர் விசேட பூசை. ஆராதனைச் செலவிற்காக தலையா மங்கலத்தில் எட்டு மா. விஷ்தீரணமுள்ள நிலத்தைத் தானம். செய்தார். இந்த. எட்டு மாவில். ஒருமா நிலத்தை. அலங்கார பட்டன் ஸ்தாபித்த விக்கிரம விசையப் பிள்ளையார்க்கு அமுதுபடிச் செலவிற்கு விட்டார் தானம் செய்யப்பட்ட நிலங்களைக். குறிப்பதிற்காக. நாற்பாற்கெல்லைகளில் திருச்சூலம் போட்ட கற்களை. ஸ்தாபித்தார் நன்கொடைச் செய்த. கம்பராயனுடைய தப்பிலா வாசகன். என்கிற சிறந்த நாமம். அவர் மேன்மையை. விளக்கும்.

மூலம் : ஸ்ரீ கித்திக்கு. மெல். *[ஏ]* கொ. மாறபன் மரானதி ஜீவனச் சக்கரவத்திகள். ஸ்ரீ விரபாண்டியதெவற்கு யாண்டு. யசு. வது மார்கழி மாதத்து. ஒருநாள். மிழலைக் கூற்றத்து. மெல்பற்று மிபாம்பாற்று. நாட்டுச் செத மங்கலத்து. அரசு. தன்மன். கம்பனுன தன்மராயனென். பெரும்பூர். நாட்டு. சாய்க்களுர். உடையார் விரசெகர ஈஸ்வரமுடைய நாயனுற்கு. சாதனம் பண்ணிக். குடுத்த. பரிசாவது. இந்நாயனுற்கு. நான். கட்டிவிட்ட தப்பிலாவாசகன். சந்திக்கு. திருவமுதுபடி. உள்ளிட்ட. விஞ்சனத்துக்கு. நாம். குடுத்த தலையா மங்கலத்து வயலில் தலையாமங்கலத்துக் குளத்துப். பழஞ்சொற்றுச் செம் மடையால். நிர்பாஞ்சு. நெல். விளையும் முளைச்சான். திருவகத்தியான். திருஞான சம்பந்த பற்றும் மற்றும் முள்ளிட்ட பறடி. பொவதி. தடி. நெடுங்கணும். கிழை மடத்தி. வயக்கலும் மெலமடத்தி. வயக்கலும் உடைய. நம்பிசாத்தி செய்யும். திருஞானசம்பந்தன் சாத்தி. செய்யும். சிவபத்தர். சாத்தி செய்யும் ஆக இவ்வட்டை. எட்டினல். நிலம். எட்டுமா இதில் இன்னயனர் கொயில் அலங்கார பட்டர் எறியருள பண்ணின ....விக்கிரம........................ விசையப் பிள்ளையாற்கு அமுதுபடி. உள்ளிட்ட விஞ்சனங்களுக்கு. விட்ட மெலைச் சாத்திசெம். ஒருமாச் செய். குடுத்தொம்.

நீக்கி. உள்ள. நிலம். எழு. மாவும் இன்னுயனுற்க்கு அமுதுபடி. உள்ளிட்ட. விஞ்சனத்துக்கு. விட்டு. தி.ரு.ச் சூல. தாபன்மும். பண்ணிக் குடுத்து. இந்நிலம் உழுத. குடிம .... முடைய திருஞானசம்ப .... ன் குட.யாக நின்று. று. குடி, நிங். கா. தெவ்தானமாக நின்று. இன்னுயனுற்கு. உழுவானுகவும். இப்படிக்கு, இந்த திருஞான சம்பந்தினே. வெட்டி. முட்டாவாள் பச்சை வினி. டெயா.கம் என்று சொல்லக். கடவதல்லவாகவும், இப்படிக்கு திருச்சூலத். தாபனம். பண்ணி. கல்லிலும். செம்பிலும். வெட்டிக் குடுத்தெனது. இறை.யிலி. காராண். கிழமையாகப் பண்ணிக் குடுத்தென். தன்மன். கம்பனுன. தன்ம. ராயனென் இன்னுயனுற்கு. இப்படிக்கு. இவை. தன்மராயன். எழுத்து காரியப் பெரில். வலி. டுக்குப் பெரையன், தற்குறியும். தன்மராய்ப் பெரையன். தற்குறிக்கும். செந்தமங்கலத்துக்கும். குழங்குடிக்கும். நாட்டுச் சமந்த. நாட்டாற்க்கும் திருஞான சம்பந்தன் தற்குறிமிட்டுற்குறிக்கும். இட்டு. இன்னுடு. கணக்கு .... ந்தக்கல்லூருடையான் சொலேமலே சொக்கன் விரசெகரனுன. விழுப்பாராயன் எழுத்து. உ

கல்வெட்டு எண் - 6 (A. R. No *103* of *1945 × 46*) ஷெ சுவரில்.

ஸ்ரீ. குலசேகர தேவ நடைய எட்டாவது. அரசாண்டில். உய்பவந்தான். பெரியநாயன். ஆன. காங்கேயன். தனது, காணியான. சிறு சாயக்களூரிலிருக்கும், செய்யை. வீரசேகர முடையார் கோவிலில் திருவலகும். திருமெழுகும். இடும் பணியாட்களின் செலவிற்காக. விட்டார்.

ஸ ஸி ஸ்ரீ

மூலம் : வ த (‖ .... ×) உய்யவந்தான். பெரியனுயனுன. காங்க்கையனெ.ன் ஸ்ரீ. குலசெகர தெவற்க்கு யாண்டு. அ.வது. சாக்களூருடையார். விரசெக.ரி ஸ்வரமுடைய யனுர்க்கு திருவலகு. திருமெழுக்குக்கு. என் காணியான சிறுசாக்களூர். வயலில். இந்தச். செய். இன்னி மந்த. த்துக்கு. சந்திராதித்தவற் செல்ல நிர்வாத்து. கல்லு. வெட்டி குடுத்தேன். உய்யவந்தான். பெரிய நாயனுன. காங்கையனென். இப்படிக்கு. காங்கையன். எழுத்து இப்படிக்கு நந்தியராயன். எழுத்து உ.

கல்வெட்டு எண் - 7 (A.R.No. *104.* of *1945 × 46*) ஷெ சுவரில்

இக்கல்வெட்டு வேளானே விடங்குனை திருக்கழிப்பாலேயுடையான். அதலேயூர் நாடாழ்வான். பாலேயூர். நாட்டின் வேங்கை வாசலில். ஆறுமா நிலம். பூதானம் செய்ததாகக் கூறுகிறது இந்த தானம் பாண்டிய மன்னன். குலசேகர தேவராசாட்சி. ஏழாமாண்டு. முதற் கொண்டு நடக்கும்படியாக விதிக்கப்பட்டது.

ஸ ஸி ஸ்ரீ

மூலம் : வ த (‖ | × ....) வெளானே. விடங்கன் திருக்கழிப்பாலேயுடையானுன. அதளேயூர். நாடாழ்வானென். கலவயல். மஹாதெவற்க்கு. நாம்

நிராவர

த்து. குடுத்த. நிலமாவது. பாலேயூர். நாட்டு. வெங்கை வாசலில். வெலஞ்செய். உள்ளிட்டமற்று, நிலம். ஆறு. மாவும் வடக்கில் ஊரணிக் குழியும். நத்தமும். இன்னு யனுற்க்கு ஸ்ரீ குலசெகர. தெவற்க்கு யாண்டு. எவது முதல். கல்லுநாட்டி. கல்லிலும். செம்பிலும் வெட்டி. சந்திராதித்தவற் செல்ல. குடுத்தென். அதளேயூர் நுடாழ்வான். எழுத்து இப்படிக்கு. விழுப்பாதராயன் எழுத்து. உ.

ஸ்ரீ உமையாம்பிகை
(இயல்புத் திருவுருவம்)



ஸ்ரீ வீரசேகரமூர்த்தி
வெள்ளி அங்கியும், நாக ஆபரணமும் பூண்ட கோலம்



கல்வெட்டு எண் - 8 (A.R. No 105 of 1945 × 46) ஷ சுவரில்

மிழலைக் கூற்றத்து நடுவிற்கூற்று. வீரமங்கலத்து ஊரவர். கலவாயில். நாயனர் கோவிலில் அலங்காரபட்டன். ஸ்தாபித்த. விக்கிரம விசையப் பிள்ளையார்க்கு. அமுதுபடி உள்ளிட்ட விஞ்சனங்களின் செலவிற்காக ஒருதடிநிலத்தை. பூதானம். செய்து அந்நிலத் திற்குத். தரவேண்டிய. வரிகளைப் பிள்ளையார்க்கு. நிவேதனம் செய்ய நியமித்தார். இக்கல் வெட்டை பாண்டிய மாறவர்மன். குலசேகர தேவருடைய 37-ம் அரசாண்டில் ஊர்க் கணக்கனை இராசராதிசுரமுடையான் எழுதினன்.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]
வ த (11 ×) கொமாறபன்மரானதிருபுவனச் சக்கரவத்திகள். ஸ்ரீ குல செகர தெவ்ற்க்கு. யாண்டு. ௩௰எ-வது. மிழலை. கூற்று. த்து. நடுவிற். கூற்று. விரமங்கலத்து. ஊர்க்கு. சமைந்த. ஊர்வர்ரொம் சாக்களூர். பிரல்கலவயல். நாயனர். கொயிலில். அலங்காரபட்டன். எறிபருளப் பண்ணின விக்கிரம விசைய பிள்ளையார்க்கு. இறையிலி. காராண்மை. பிரமாணம். பண்ணி. குடுத்த பரிசாவது. இவர். வயலில் வரிசை பற்றின வெளான் மடையால். நிர்பாஞ்சு. நெல். விளையும். கொற்றண். செய். தடிமுழுது. இப்பிள்ளையாற்க்கு அமுதுபடி 'உள்ளிட்ட விஞ்சனத்துக்கு. இறையிலியாக. சந்திராதித்த வரை. செல்ல கல்லுநாட்டி. குடுத்தோம். ஊர்க்கு சமைந்த. ஊர்வரொம் இன்னிலம் தங்.களுக்கு வெண்டும் குடிக்கு குடுத்து. உழுவித்து. கொள்ள கடவராக ஆகவும். இ ப்படி சம்மதித்து, இறையிலி காராங்கிழமை பிரமாணம். பண்ணி. குடுத்தொம். அலங்கர பட்டற்க்கு, விரமங்கலத்து, ஊர்க்கு சமந்த ஊரவ. ரொம். ஊரார் சொல்ப் படிக்கு. இ. ஊர்க். கணக்கன். இராசராதிபவரமுடையான் எழுத்து. உ.

கல்வெட்டு எண்-9 (A. R. No 106 of 1945 × 46) ஷ சுவரில்

ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர். அரசாட்சி 14. தின் எதிராமாண்டிம். உதையன். பெரியனை. காங்கேயன், ஸ்ரீவீரசேகரீசுரமுடையார் கோவிலிற்கு ஆதி. சண்டேசுர நாயனர் பேரில் செய்த. பூ தானத்தை இக். கல்வெட்டில். பதிக்கப்பட்டுள்ளது. தானம் செய்யப்பட்ட நிலம். பெரும்பூ. நாட்டில் வெண்குளமான. மாளுவ மாணிக்க மென்கிற. கிராமத்தைச் சார்ந்தது நிலத்தைக். கூத்தன். ஈசன் அதிகைமான். பயிர்செய்து. முதற்செய்ததில். விழுக்காடு. வினியோகம் முதலிய கடமைகளை, ஸ்ரீ வீரசேகரீசுரமுடைய நாயனருக்காக. ஆடி மாதத்தில் உதையன் பெரியன் பிறந்த. உத்திர நக்ஷத்திர நாள். விசேட பூசைகளின். செலவிற்காக செலுத்தும்படி கட்டளை. இடப்பெற்றான் மேற்கூறப்பட்ட. அதிகைமான் தேவன் பாண்டிய குலசேகரதேவருடைய கல்வெட்டில் (நெ. 15) காணப்படுகிறான்.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ
வ த (11 ×) திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய.
தெவற்க்கு. யசவதின். எதிராமாண்டு தொள சிங்க வளநாட்டுப் பெரும்பூர் நாட்டுச் சாய்க் களூர் உடையார் விரசெகரிபவரமுடைய நாயனர். கொயில். ஆதி சண்டெஸ்வர. நாயனற்க்கு உதையன் பெரிய நாயனை. காங்கயனென். இறையிலி தெவதானப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது. இந்நாட்டு வெண்குளமான. மாலுவ மாணிக்கத்துவய்யலில் இறையிலி யாக. நான்கெல்லியிலும். கல்நாட்டிக். குடுத்த. நிலமாவது உஞ்செனைக் கூத்தன். ஈசனை. அதிகைமானுக்கு இவ்வய்யலில். இவனுக்கு நாம் காணியாகக் குடுத்த. நிலமாவது. குடி தாங்கி. வயக்கலும் மெற்படி. நாற்றுத்தாயம் நாலாம் வரவையும். ஆழம். தடி இரண்டும்

இணைவரவையும். இக்கல் நாட்டின நான்கெல்லைக்குள்ளு. அகப்பட்ட முதுநிலமாய். வாரம் பாதி பாழாய்க் கிடந்த. நிலங்களும் அடியாற்க்குமிண்டான். ஊரணியும் செங்கயத்தங்குடிப் பற்றுன வாகைச் செய்யல் நாரணன். முக்காணியும். சென. கிணற் செய்ய ம் ஆக இந்நிலங் களும். இவ்வெல்லைக்குட்படமுது. நிலங்களுக்கும் பெரும்பூ. நாட்டில். விழுக்காடு. கொல். குடி தாங்கியால் அளந்து. அளவுபட்ட நிலத்துக்கு புன்னிடக் காலத்தில். ஒன்று முக்காலுக்கு மாத்தால்ரல். மாளவ கிங்கத்தால். அளக்கும். உ சாளமும் குடி தாங்கியால். அளவுபட்ட நிலத்துக்கு. நாட்டு விழுக்காடு வினியோகம் முதலாக உள்ளன. அம்மற்றும். எப்பெர்ப்பட்டனவும் இந்நாயனுற்க்கு ஆடி திருநாளில் நாம் பிறந்தநாள. ஆடி உத்திரம் தித்தமாக. திருநாள் எழுந்தருளத். திருநாள். தெவைக்கும். அமுதுபடி உள்ளிட்ட விஞ்சனத் துக்கும். இந்நாள்முதல் சந்திராதித்தவர். செவதாகக்கல். நாட்டிக் குடுத்தொம். இப்படி கல்லிலும் செம்பிலும். வெட்டிக் கொள்ள இப்படிக்கு. காங்கயன். எழுத்து நந்திராயர் எழுத்து. பலமாஹெபவர்கும் இரக்ஷை—2.

கல்வெட்டு எண் - 10 (A. R. No *107* of *1945 × 46*) ஷை சுவரில்

கி. பி. *1268*-ஆம் ஆண்டில். அரசு புரிந்த மாறவர்மரான எம்மண்டலமும் கொண் டருளிய. குலசேகர தேவருடைய ஏழாம் அரசாண்டில் (அதாவது. கி. பி. *1275*) கோள. சிங்கவளநாட்டு. ஆம் போக்குடி. ஊரவர்.

ஸ்ரீ வீரசேகரிசுரமுடையார்க்கு. ஆதி சண்டேசுர நாயனர் பேரில். நிலவிக்கிரயம் செய்ததாக இக்கல்வெட்டுக் கூறுகிறது. விற்றுக் கொடுத்த நிலமானது ஆம்போர்க்குடிக். குளக்கரையருகிலுள்ளது. இதை விற்பனைச் செய்வதில். சில. முறைகள் வழங்கப் பெற்றன. அதாவது. நிலத்தின் விலையை. நிற்சயித்தப் பிறகு. அதை மும்மாறு. யாவரும் கேட்கும்படிச் சொல்லி பிரமாணம் பண்ணி. விலையாவணக் களத்திலேயே. நிலம். வாங்கு பவரிடத்திலிருந்து, விலைப்பொருளைப். பெற்றுக் கொண்டதாகவும் விலைத்தொகையுடன். விற்பனைச் செலவுகளையும். கூட பெற்றுக் கொண்டதாகவும். தெரிய வருகிறது நிலத்தை கொண்டவர்களின் சார்பு செய்யும். பொழுது.·ஓலையொன்று எழுதிக்கொடுத்து இவ்வோலை யன்றி. வேறு. ஓலை காணவும் காட்டவும். கடவதல்லவாகக் கட்டளையும் இட்டார் ஓலை யினுடையப். பிரதியை. கல்லிலும் செப்பேடுகளிலும் பதிக்கச் செய்யுமிடத்தில். கோவிலின் சுவரிலேயே கல்வெட்டுப் போட்டதாக. தெரிய வருகிறது. கோவிலைத் திருமலை என்று வழங்கியதாக சாசனத்திற் காணலாம். விற்றுக் கொடுத்த. நிலம் முது நிலமாய்ப் பாழாய் கிடந்ததாகவும் அதைத் திருத்தி வரம்பிட்டு வேண்டிய பயிற்செய்துக் கொண்டு அனுபவிப்பதாக ஊரார் கோவிலிற்கு அனுமதி கொடுத்தார் மேலும் நிலத்தின். நான்கு எல்லைகளில். திருச்சூலம். போட்டக் கற்களை நிறுத்தினர். சிவபெருமான் கோவில் நிலங்களிற்கெல்லாம். திருச்சூலக்கற்களும். விஷ்ணு கோவிலைச் சாந்தவைகளிற்கு. திரு வாழிக் கற்களை நிறுத்துவது. பண்டை நாட்களின் முறை.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]
வ த (*11* ×) கொ. மாறபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள். எம்மண்டல மும். கொண்டருளிய ஸ்ரீ குலசெகரதெவற்கு. யாண்டு. எ-வது கேரள சிங்கவள நாட்டுப் பெரும்பூர் நாட்டுச் ‚சாய்க்களுருடையார். விரசெகரிபவரமுடைய நாயனர் கொயில் ஆதி சண்டெசுர நாயனர்க்கு இந்நாட்டு வடவனுக ஆம் பொற்குடி. ஊற்க்குச் சமைந்த. ஊரவ ரோம் நிலவிலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது நாங்கள். விற்றுக் குடுத்த முது. நிலத்திற்கு எல்லையாவது. கிழ்பாற்கெல்லை. ஆம் பொறக்குடி. குளகரைக்கு மெற்க்கு அக்குளத்தில் கடை பொகிற வாய்க்காலுக்கு மெற்க்கும் தென்பாறக்கெல்லை. ஆற்று

விக்கும். பெ.ருங்கள்ளாங்குடிக் குளக்கரைக்கு. வடக்கு மெல்பாற்க்கெல்லை இந்நாயனர் தெவதானம் முக்கு வயலான—தெவாரச நல்லூர் கிழெல்லைக்கு கிழக்கு வடபாற்கெல்லை. ஆம் பொற்குடிக் குளத்துக்கு நிர்பொதிற காலுக்கு. தெற்கும் ஆக. இந்நாங்கெல்லைக்குட் பட்ட நிலம். ஆக்கித் திருத்தி வரம்பிட்டு வெண்டும் பயிர் செய்ததுக் கொள்வாராக. விலை.

ஆவாணம் பண்ணிக் குடுத்தோம். ஊராரிசைந்த ஊரவரொம் ஆதி சண்டேபவாற்க்கு இப்படி விற்றுக் குடுத்த இந்நிலத்துக்கு எம்மில் நிச்செயித்த பொருளும் விலையாவணக் களத்திலெ கட்டியெறக்கச் செலவு. அறக்கொண்டு விற்று. விலை வாணம் பண்ணிக் குடுத்தொம். ஊராரிசைந்த ஊரவரொம். ஒரு காலாவது, யிருகாலாவது.

முக்காலாவதும். ஓலைக்குற்றம். எழுத்துக் குற்றஞ் சொற்குற்றமின்றி. யெ. விற்றுக் குடுத்த. நிலத்துக்கு இதுவெ விலை.

யொலையாவதாகவும். இதுவெ. பொருளுமாவறுதிப் பொருள். செலவொலையாவதாகவும் இது வல்லது வெறொலை. காணவும் காட்டவும் கடவதல்லவாகவும் இப்படியிலெ. சந்திராதித்தவற் செல்வதாக திருச்சூலக் கல்லும் எழுந்தருளு. வித்து திருமலை—யிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்து விற்று விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்தொம். ஆம் பொற்குடி ஊராரிசைந்த. ஊரவரொம். ஆதிசண்டெசுரதெவர்க்கு வாகெயன் பொன் மாளிகைம்மாட்டு அறிந்து அவையன் பொன்மானி எழுத்து. அட்டலையிட்டுக் கதிரனை விருதராசயன் தற்குறியுமிட்டு நானுமறிவென். திருநட்ட மாடி பட்டன். எழுத்து. முத்தாண்டான் தற்குறியுமிட்டு குழிச்சார்ப்பட்டையார்பிள்ளைகளில் சாலையார் எழுத்து.

கல்வெட்டு எண்-11 *(A. R. No 38 of 1946 × 47)*

மஹாமண்டபத்தின் கிழ்ப்புரம் சுவரில் பிரதான வாயிலுஞ் வலது புரம்

ஸ்ரீ வீரசேகரீசுரமுடைய நாயனர்த்திருக்குளத்தில் சன்னதித் திருமஞ்சனப் போய்கையும் துறைமுகமும் கட்டியமையச் செய்து வருடந்தோறும் சீராக வைப்பதிற்காகச் சாய்க்களூர். ஆசாரிகளில் வீரன் சிராண்டாரான. ஆனந்தநாதருக்குச் சாய்க்களூர். ஊரவர். இவர் வாணதராயரிடத்திலிருந்து கொண்ட நிலத்திற்கு இறுக்க வேண்டிய கடமைகளைக் கழித்து இறையிலிச் செய்ததாகக் கல்வெட்டில் எழுதியுள்ளது. இச்சாஸனம் பாண்டிய அரசனை மாறவர்மன் சிவல தேவரா சாட்சியில் 4 ம் ஆண்டில் போடப்பட்டது.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]
வ . த (11 ×) கொமாறுபன்மரான திஹு॰வனச் சக்ரவத்திகள். சிவல். தெவற்கு. யாண்டு தை மீ ஏ. உ கெரள சிங்கவளநாட்டு.பெரும்பூர் நாட்டுச் சாய்க்களூர் வற்கு சமைந்த ஊரவ. ரொம். இவ்வூர். ஆசாரியர்களில் வீரன். கிராண்டாரான. ஆனந்த நாதற்கு. இறையிலிப் பிரமாணம் பண்ணிக் குடுத்த. பரிசாவது.உடையார் விரசெகரிசுவர முடைய. நாயினர்த் திருக்குளத்தில் சன்னதி திருமஞ்சனப் பொய்கைக்கும் துரைக்கும் இறையிலியாக. ஆவுடையார். வாணவதரையர். பக்கல். இவர் கொண்ட நிலம் சாய்க்களூர். குளத்து அீனத்து மடையிலும் ம் உலகன். வயக்கல். தடி முழுதும் உதையன். வயக்கல் தடி முழுதும் இச்செய் சூரியவா.........னும் பல பெர்ப்பட்டமாக இருமழற்றும் எப்பெறப்பட்ட .... ததிகளும் இறையிலியாக. கல்லிலும் செம்பிலும் கல்லிலும் வெட்டிக்குடுத்தோம் ஊற்கு சமைந்த ஊ.

ரவரொம் ஆனந்தகாதற்கு இப்படிக்கு ஊற்குச் சமைந்த ஊரொம் தற்குறிக்கு.

கல்வெட்டு எண்-12 *(A. R. No 39 of 1946 × 47)* ஷ சுவரில்)

பெரியநாயன். அழகனுன காங்கேயன் ஸ்ரீ வீரசேகரீசுரமுடையாருக்கு. தன் பெயரால் துடங்கிய மணவாளன் சந்தி என்கிற விசெட பூசைக்கும் அமுதுபடி முதலிய நிமந்தங்களின் செலவிற்காக விலேக்கு வாங்கிய தான கொஞ்சம் நிலத்தை இறையிலி காராண்மையாக தானம் செய்தார் பாண்டிய மன்னன். மாறவர்மரான குலசேகர தேவருடைய 4 ம் அரசாண்டு முதல் அந்நிலத்திற்குச் செலுத்த வேண்டிய இறை. அந்தராயம். முதலிய குடுவைகளைக் கொடுக்க வேண்டிய வரிகள் கழித்துக் கொடுத்ததாகக் கல்வெட்டு கூறுகிறது.

மூலம்

ஸ வி ஸ்ரீ]
வ த (|| ....) பெரியனுயன். அழகனுன காங்கையனென். சாய்க்களுர் விரசெகரிபவமுடைய மஹதெவற்க்கு இறையிலி. காராணமை வரதாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது. நம்பெரால் அமுது செது பொதுகிற. மணவாளன் சந்திக்கு உஞ்செனப்பற்றுக் குடிபுரவான சுடங்கழி வடவகை .... ளையில் சுற்றும். நாம். பொருள். குடுத்து. விலே கொண்டு ஸ்ரீ கொமாறபன்மரான. திருப்புவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசெகர தெவற்கு யாண்டு. ச. வது முதல் உள்ள இறை. அந்தராயம் மற்றும். எப்பெர்பட்ட குடுவைகளும் நம் பெரால் அமுது செய். பொதுகிற மணவாளன் சந்திக்கு நீர் வாத்து சத்திராதித்தவல்ல கல்லிலும். செம்பிலும் வெட்டி கல்லும் நாட்டிக் குடுத்த ஸ்ரீ செகரிப வரமுடையார் மஹா தெவற்கு பெரியனுயன்னுன. காங்கையனென். இப்படிக்கு இவை காங்கையன். எழுத்து. இப்படிக்கு இவை வழுதியதரையன் எழுத்து உ. மாஹெசா ரக்ஷிக்க உ.

கல்வெட்டு எண் - 13 A.R. No 40 of *1946 × 47)*

ஷ சுவரில் கணபதிக்கு சமீபம்.

இந்தக் கல்வெட்டு காங்கேயனுடைய அறவோலேயே இவர் ஸ்ரீ விரசேகரீசுரமுடையார் கோவிலில். அலங்காரபட்டன் ஸ்தாபித்த. விக்கிரம விசையப் பிள்ளேயார்க்கு அமுதுபடி முதலான விஞ்சனங்களிற்காக விசலூர் வயலில். பிடாரி வயக்கல் என்கிற நிலத்தைத் தாணம் செய்தார் இந்நிலத்திற்கு'இறைகளொன்றுமில்லாமல் நாட்டாரால்.கழிக்கப்பட்டது. இந்த தானம் செய்த தேதியைக் குறிக்குமிடத்தில் ஆண்டு 8. வதின் எதிராமாண்டு. மார்கழி மாதம் முதல். என்று சொல்லப்பட்டிருப்பதே தவிர. எந்த அரசனுடைய. ஆட்சியிலென்பதைக் கூறப்படவில்லே. ஆயினும் இதில். காணும். அலங்கார பட்டனென்பவன். மேற்கண்ட செ 8. வது மாறவர்மரான. குலசேகருடைய 37 ஆம் ஆண்டில் போடப்பட்ட சாஸனத்தில். கூறப்பட்டுள்ள படியாலும் : காங்கேயன் என்பது செ 12 வது கல்வெட்டின் பிரகாரம் இதே. அரசனுடைய 4. வது ஆண்டில். வாழ்ந்திருந்தபடியாலும் இவ்வோலேயும். இந்த அரசனின். ஆட்சியில், விடுத்துள்ளதென்றுச் சொல்லத் தகும்.

மூலம்

ஸ வி ஸ்ரீ]
வ த (|| ×) காங்கையன். ஓலே. அலங்காரப்பட்ட கண்டு. கலவயல். நாயனர் கொயிலில் நாம் எழுந்தருளுவித்த. விக்கிரம விசைய பிள்ளேயாற்க்கு. அமுதுபடி உள்ளிட்ட விஞ்சனத்திற்கு. யாண்டு. அ. வது. எதிராண்டு மார்கழி மீ முதல் முன்னுள். நாட்டரர் இறையிலி. கழித்த. விசலூர் வயலில் பிடாரி, வயக்கல். சந்திராதித்தவரை செல்வதாக

கால் கடமைக்கு. ஒரு பொக்கில்லாமல் இக்கடமை முதலுக்கு நாங்கள். இந்நாயனர் வீரசெகரிஸ்வரமுடை நாயனர்க்கு

இறையிலியாக. விற்றுச் செம்பிலுங். கல்லிலும் வெட்டிக் குடுத்த எங்கள். காணியாய் உடை குளப்பட்டு. காடு எழுந்து கிடந்த எங்கள் காணி மும்முடி சொழன், இறையிலி காராண்மை. யாக. விற்பதற்க்கு. இவ்வூர்க்கு பெருனன்கெல்லையாவது கிழ்பாற்கெல்லே. இன்னயனர் தெவதானம். சடங்கிழியான. சண்டெஸ்வர நல்லூர் புல. குள எல்லைக்கும் மெலைமிபாம் பாற்று நாட்டு காணியான மானவ கண்டன் எல்லைக்கு மெற்க்கும் தென்பாற்க் கெல்லே. சாயக்களூரின்றும் விரமங்கலத்தெற்ப் பொகிற வண்டிபெரு. வழிக்கு. வடக்கும் மெல். பாற்கெல்லே. நித்தவி நெதபன்மன்குடி. இரும்பும் புன்செய்யுமான. நிலையில். நின்றும். பெரிய. கொட்டைக்கு பொகிற வழிக்கும். கிழக்கும் வடபாற்கெல்லே இந்நாயனர் தெவதானமான முத்தரையன் குடிக்காட்டு, எல்லைக்கும் மாறநெரித்தென்னெல்லைக்கும் சிறுவயல். தென்னெல்லைக்கும் களாருடையார் கொயிலுக்கு. வடக்கு கிழக்கு. ஒனக்கிப் பொன் வழிக்கு. தெற்க்கும் ஆக. இசைந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட நத்தமும் நத்தப்பாழும். குளமுங்குளவாய்த் தலையும் குளப்பரப்பும் வயலும் புன்செய்யும் புளியும் காடுங்களரும் மற்றும். இந்நான்கெல்லைக்குட்ப்பட்டவை. அனைத்தும். இற்றை நாளில். இறையிலி. காராண்மையாக. விற்பொமிசைந்து விற்பதற்க்கு விலை நிற்சயித்து இந்நாயனர் திருவாபரணம். விற்று. தெவர் அதிகைமான் தெவர்க்கு.

நாங்கள். இக்கொயில் தெவகன் மிகன் சிகாரியஞ் செய்வார்களைக் கொண்டு. ஒடுக்கு வித்த.

உள இப்பணம் இருநூறும் விலையாவன. களத்தெ காட்டி. எற்றக் கைச்செல் வறக் கொண்டு. விற்று இறையிலி காராண்மை 27 மாணம் பண்ணிக் கல்லிலும்ச் செம்பிலும் வெட்டிக்குடுத்து கல். நாட்டிக் குடுத்தொம். ஆதிசண்டெஸுவரர்க்கு இவ்வூரார் இசைந்த ஊரவ ரொரம் இப்படி இறையிலி காராண்மையாக. விற்ற மும்முடி சொழன். காடும் வெட்டி திருந்தி இவ்வூர் முன்பெ. சட் பட்ட நான்கெல்லைக்குள் உள்ள நீர் நிலங்களும் புன்செயா வன புன்செயாகவும் நன்செயா வனவெட்டிக் திருத்திக் கொள்ளச் சந்திராதிராதி ராதித் தவர். செல்ல இறையிலி காராண்மையாக. விற்றுச்செம்பிலுங், கல்லிலும் வெட்டி கல்லும் நாட்டி குடுத்தொம். ஆதிசண்டெஸுவரற்க்கு ஊராரிசைந்த ஊரவரொம் உ இப்படிக்கு அமைய பஞ்சாப் பல்லவதரையன். எழுத்து

இப்படிக்கு செனவரையன் எழுத்து இப்படிக்கு கண்டதெவன் முவெந்த வெளான் எழுந்து.........ம் பல்லவ தரையன் எழுத்து............ — ....யன் எழுத்து. அலங்காரப் பட்டன். எழுத்து............முங்க............முதது காங்கைதரை யன். எழுத்து. அரசு தியாகப் பல்லவதரையன். எழுத்து வெனவுடையான் எழத்து. இப்படிக்கு இவ............ கணக்கு வெதன்.

கல்வெட்டு எண்-16 *(A. R. No 43 of 1946×47)* வடக்குச் சுவரில் மஹா மண்டபம். *(= 1223 AD.)*

சோழனை வென்று நாட்டை பறித்து மறுபடியும் அவனுக்கே முடிசூட்டி சோனாடு வழங்கியருளிய என்கிற சிறப்புப் பெயரையணிந்த மாப்பெரும் பாண்டிய அரசன். சுந்தர பாண்டிய தேவர் காலத்தில் 7ம் ஆண்டில் காங்கேயன். என்பவர் வீரசேகரீசுரமுடையாருக்குச் செய்த உபயத்தை இக்கல்வெட்டுக் கூறுகிறது தனது பிறந்த நக்ஷத்திரமான திருவாதிரை தோறும் ஈசனுக்கு நெய் பால் அபிஷேகமும் பூசை அமுதுபடி திருப்பணியாரம் முதலிய விஞ்சனத்தின். செலவிற்காக இவர் கத்தூரி மங்கலத்தில். தனக்கு கிடைக்கும் அந்தராயம் முதலான வருமானங்களைக் கொடுத்தார் சித்திரை மாதத் திருவாதிரையன்று. அதிக பூசை. அபிஷேகங்கள் ஏற்படுத்தி விட்டதால் இவர் இம்மாதத் திருவாதிரையில் பிறந்ததாகத் தெரிய வருகிறது.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]

வ த ‖ .... (11×) திருப்புவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ) சொனடு வழங்கி யருளிய சுந்தரபாண்டிய தெவற்கு. யாண்டு. எ. வது. காங்கையன். ஒலை. விரசெகரிபவர முடைய நாயனர் கொயில். தானத்தார். கண்டு. சாயக்களூர் பற்றில் திவித பற்றிய. உஞ்செனை கங்கை கொண்ட பெரியரையனுக்கும் ஜவன் நிச்சனை கண்டமிகாம பெரியரை யனுக்கும். கண்டன் பகையஞ் சாதனை தியாக கண்ட பல்லவ தரையனுக்கும் சொழன் பள்ளியான் வாணராயனுக்கும் பனங்காடியான். விரசொழ நல்லூர். வளையிற் சுற்று. கடமை. அந்தராயமும். முன் பெ. பழந்தெவ தானமாய் இந்நாயனர். காராங்கிழமை. நிங்கலாக கடமை. இறுத்து. பொதுகிற. கத்தூரி மங்கலத்து கடமைபி. லெ. இது....... ஒருமாநிலத்துக்கு வளையில் காலால் அளக்கும் ஜகாளங்யாகவும். காசு உயபதும் அந்தராய மும் நாம் பிறந்தநாள். திருவாதிரைதொறும் நெய்யாடி அருளுகைக்கு. தந்தொம் எழா வது முதல் ஆட்டைக்கு. பதின்மூன்று நெய்யாடி அருளக்கடவதாகவும்

ஆடி அருளும் இடத்து. சித்திரைமாதத் திருவாதிரைக்கு. இருபத்தைஞ் ஞாழி நெய்யும்

....

அமுதுபடி நாயனற்கு. இருபத்தைஞ் ஞாழி அரிசியும் பிள்ளையாற்கு இரு (நா)ழி அரிசியும் திருப்பணியாரத்துக்கு அப்ப. அமுதுக்கு குறுணி அரிசியும் மற்ற மாதங்களில் திருவாதிரை நாளில் நெய் நானழியும் அமுது படி அரிசி எண்ணழியும் அப்ப.

அமுதுக்கு அரிசி இரு நாழியும். இனவயிற்றுக்கு இவ்வூர் கடமை. அந்தராய மற்றும். எப். பெறப்பட்டனவும் சந்திராதித்தவரை செல்வதாக. கல்நாட்டி திருமலையிலெ. எழுத்தும் வெட்டி குடுத்து. பெரும்பூர் வயலில் நஞ்சு வயக்கல் உள்ளிட்ட நிலம். அஞ்சுமாவும். நாற்றுக் கல்லும் நாளொன்றுக்கு இரு நாழிபால் ஆடி அருளவும் நாம் பிறந்த நாள்தொறும் நெய்யொட. கூட நானழிபால். ஆடி அருளக் கட வதாக சந்திராத்த வரை காராண் கிழமை யாக நிர்வாத்து கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ள. இப்படிக்கு இவை காங்கையன் எழுத்து. இப்படிக்கு. இவை சுரந்தரபாண்டி முவெந்த வெளான் ; எழுத்து.

கல்வெட்டு எண் : 17 (A.R. No 44 of 1946 × 47).

தெற்கு சுவரில் பிரதான நுழை வாயிலுக்கு வலதுபுறம், பாண்டிய மன்னனை மாற வர்மராகிய சுநதரபாண்டிய தேவருடைய காலததில் இக்கல்வெட்டுப் போடப்பட்டுள்ளது. இவருடைய அதிகாரி. காங்கேயன் கருணவனக்குடியில் பாலக்குடி என்கிற நிலப்பரப்பில் தனக்குருமையாகிய சில இறைகள் முதலான. வருமானங்களைக் கருணவலக்குடி. நாயனர்க்குப் பூசை அமுதுபடிச் செலவிற்காகக் கொடுத்தார். இந்நிலத்தைக் கருணவலக் குடிக்கோவிலார் அவ்வூரார் பக்கல். ஆதிசண்டேசுரர் பேரில் விலைக்கு வாங்கினபடியால் மேற்கண்டவ ஜாவை ( ) காங்கேயன் அருள்செய்து, பாண்டிய அரசனுடைய 4 வது எதிர் 3-வது அரசாண்டு முதல். நடக்கும்படியாகக் கட்டளையிட்டார்.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]

.... வ த (‖ ×) காங்கையன் ஒலை (‖ ×) பெரும்பூனட்டு இசலூர் பார். கருணவனக் குடியில். யனர் ஸ்ரீ கொயில் குஷவகன் மியன். சிகாரியஞ் செய்

வ்வார்கள். ஸ்ரீ மாஹெபவர கண்காணி செய்வ்வார்கள்,

கண்டு. இன்னுயினுர் இவ்வூரார் பக்கல். சண்டெபவரவிலே திருனமத்துக். காராங்கிழமை யாக விலே கொண்டுடைய இவ்வூர் பாலக்குடி காடு காரி

[ ]

சாத்தக்குடிக்கு. பெருநாங்கு. எல்லே கீழ் எல்லே. வண்ணுன். எம்பலுக்கு மெற்க்கும் தென். எல்லே கருனுலக்குடி

எல்லேக்கு வடக்கும் மெற்கெல்லே புதுவயல் ஆசனுதிக்குக் கிழக்கும் வடக்கெல்லே பூந் தொட்டக்குளத்துளத் வாக்குத் தெற்க்கும் ஆகஇ(ன) சந்தபெருனுங்கெல்லேக்குள்ளகப் பட்ட வயலும் குளமும் குளவாய்த் தலேயும். கிழ்னெக்கிய. கிணறும் மெனெக்கின மரமும்

மற்று எப்பெற்ப்பட்டனவும் விலேகொண்டு. அனுபவிக்கிற. இவ்வயலில் ஸ்ரீ கொமாறு பன்மரான திரஹுவனச் சக்கரவத்திகள். சுந்தரபாண்டிய தெவற்குயாண்டு ச-வது எதிர் முன்ருவது

முதல். கடமை. ஏவல்த்
தெவைய நெல்லு. கா சு. உள்ளிட்ட மாற்றும். எப்பெறப்பட்ட இறை. குடிமைக்கும். இத் தெவதற்க்கு. நாலாவது. எதிர். இரண்டாவதுவரை. கிழ்னளில் உள்ளிறை. குடிமை. களும் இந்தக் கருனுவலக்குடி. னுயினுர்க்கு. திருப்படி மாற்று. உள்ளிட்ட நிமந்தங்களுக்கு சந்தி. ராதித்தவற்செல்வதாகங் குடுத்தொம் இப்படிக்கு கல்லிலும். செம்பிலும் வெட்டிக்கொள்க. இவை நந்தியராயன் எழுத்து.

கல்வெட்டு எண் - 18 (A.R. No 45 of 1946 × 47) ஷை சுவரில்.

இக்கல்வெட்டினுடைய பெரும்பாகம் உடைந்து காணுமற் போனபடியால் இதனுடைய சாராம்சம் தெரியவில்லே. ஏதோ ஒரு தானத்தைக் குறிப்பது போல். காணப்படுகிறது. அரசனுடைய பெயர். திருப்புவனச் சக்கரவத்தி கோ. நெரின்மை கொண்டான். என்று கூறப்பட்டுள்ளது.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]
வ த (| × ....) தி] ஹுவ வனவாக] வத்தி கொநெரின்மை கொண்டான். சாய்க் கஞர் உடையார் விரசெகரிபவரமுடைய நாயஞர் கொயி :— டொம் இவ்வூர்களில் வெட்டி முட்டாவான் பச்சை விபியொகம். மற்றும். எப்பெறப்பட்டனவும். இறையிலி. காராண்ன

கல்வெட்டு எண் - 19 (A.R. No 46 of 1946 × 47) ஷை சுவரில்

இது எம்மண்டலமுங் கொண்ட குலசேகர தேவருடைய அரசாட்சியில் போடப்பட்டது. உடைந்து சிதிலமானபடியால். இதன். கருத்து பூருவும் புலன்படவில்லே. வீரசேகரீசுர முடையார்க்கு. புதுவயலிலும் சிறு புது வயலிலும் முள்ள. வயலும் பூந்தோட்டமும் குடி. நீங்கா தேவதான. மாக விட்டதாக நோக்கமுள்ளதாக தெரிய வருகிறது.

மூலம்

ஸ ஸி ஸ்ரீ]
வ த [|| ×] ஸ்ரீ மக்கித்திக்கு மெல். ஸ்) தருபுவன சக்கரவத்திகள். எம் மண்டலமும், கொண்ட அருளிய ஸ்ரீ குலசெகரதெவர்க்கு யாண்டு | மெசல் கிர்வாத்து

ஸ்ரீ உய்யவந்தம்மன்
(இயல்புத் திருவுருவம்)



விசலூர்பாற் புதுவய.சிறு. புதுவயலான. இடைக்குளத்து. வயலும் பூந்தொட்ட வயலும் இவ்வயல்களில். குளங்களும். காலகளுத்தலைகளும் இவ்வயல்களுக்கு உரிச்சானவை எப்பெறப்பட்டனவும் பற்ற சந்திராதிச்சவரை இவற்க்கு. கு.டி நிங்காதெவதானமாக பற்றி இந்நாயனுர் கொயி. செம்பிலும் வெட்டிகொள்ளுவராகவும் இப்படி சம்மதித்து இறையிலி. காராண் கிழமையாக பிடிபாடு பண்ணிக்குடுத்தோம் உடையார் விரசெகரிபவ முடைய நாயினுர்.

( )

யான விரசெகரநல்லூரும் கத்தூரி மங்கலமும் கிழைவெயிற்க்குடி .... ம் முன்ருவது கார்த்திகைமா ( )

க்கண்டன் தற்குறி .... .வெற் .... கண்டாணன். எழுத்து இப்படிக்கு இவகள் சொல்ல. இப்பிடிபாடு. எழுதினென். சாக்களுர் கணகு.

யநாயன். கற்குறி—க. ஆதியாண்டான் எழுத்து. இப்படிக்கி. இவை. பெருமாள் கண்டன் தற்நறிக்கு. இக்கொயிலில். கணக்கு விரசெகர வெளா.

கல்வெட்டு எண் 20 (A.R. No *47 of 1946 × 47)* ஷை சுவரில்

இக்கல்வெட்டு பாண்டிய சிவலதேவராசாட்சி 8-வது ஆண்டில் வெள்ளானை விடங் கனப்பப் பஞ்சரனுன விருதராச பயங்கர. அதலையூர். நாடாழ்வான். ஸ்ரீ கலவயல். மஹா தேவர்க்கு சிவராதி பூசைத் திருப்படி மாற்று. முதலிய விஞ்சனங்களின் செலவிற்காகச் சிவ. சாயக்களுர் வயல்களில் இருமா வரை விஸ்தீர்ணமுள்ள நிலத்தை தானம் செய்ததாகக் கூறுகிறது.

மூலம்

திருப்புவன
ச் சக்கரவ
த் திகள் ஸ்ரீ/வ
லதெவற்கு.யா
ண்டு. அ. வது வெள்ளா
ஊ விடங்கன். அபை

பஞ்சானன. விருதரா
சபயங்கர. அதளையூர்
நாடாழ்வானென் கலவயல்
மஹாதெவற்கு ஸ்ரீ வராதிர
க்குத்திருப்படி மாற்று
உள்ளிட்ட

விஞ்சனத்துக்கு நிர்வார்த்த நிலமாவது, நங். காணியான சிவ. சாயக்களுர் வயலில் பரனூர். வயக்கல். தடி. இரண்டில்ஞல் நில இருமா வரையும் சித்திவத்துக்கு. சந்திராதித்த வற் செல்வதாக நிர்வாத்து குடுத்தென். வெள்ளானை விடங்கனை அபையபஞ்சரன் விருத ராசரெயங்கர அதளையூர் ஞட (‖ ....) த் (ா) வானென் இப்படிக்கு இவ்விருதராச பயங்கர வெளான் எழுத்து.

கல்வெட்டு எண் 21 (A.R. No. *48 of 1946 × 47)* ஷை சுவரில்

மூலம்

ஸ ஸி ஸ்ரீ

வ த (‖ ×) குமாறபன் மராதை] ஹி வனச்சக] வ்.......... ந்தா பாண்டிய தெவ
.... ண. பட்டனு .... இபூர்வி. செங்கழ

நீர் எம்பலு .... இவ்வெம்பல்புரவும் இவ்வூர் கிழ ....ம் கிழனெக்கிய கி நிச்சயித்த. நெல் எழு. கல்ெ. இருதூணிக் குறுணி அறுநாழி .... கும். எற்றி. நா விளைந்த நிலத்திற்கு .... நிக்கி. ஒன்று பாதியாக வரிகல ....குணக்கு எழுளெ இரு ....ணக்க.

